உ

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீ சங்கராசாரியசுவாமிகள்

வடமொழியில் அருளிச்செய்ததை

திருவிடைமருதூர் - பிக்ஷுசாஸ்திரிகளென்னும்

ஸ்ரீ உலகநாதசுவாமிகளால்,

மொழிபெயர்த்தருளிய

விவேகசூடாமணிமூலம்.

இஃது

சமிவனக்ஷேத்திரமென்னுங் கோயிலூர்

ஸ்ரீ முத்துராமலிங்கசுவாமிகளின்

ஆதீனத்திற்குரிய

ஸ்ரீ சிதம்பரசுவாமிகள்

மாணாக்கர்களிலொருவராகிய

அ-இராமசுவாமியவர்களால்

கோயிலூரேட்டுப்பிரதிமுதலியபலபிரதிகளைக்கொண்டு

பரிசோதித்து

காந்தீசுரம்-சொக்கலிங்கசுவாமியவர்கள்

வேண்டுகோளின்படி,

சென்னை:

ஜீவரக்ஷாமிர்த அச்சுயந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

சர்வசித்து ௵ மார்கழி ௴

1887

இதன் விலை நூ. ரூ.

உ

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

குருவேநமஃ

விவேகசூடாமணிமூலம்.

பாயிரம்.

எவ்விநாயகனைமுன்னமியாவரும்பூசைசெய்து
தவ்வுறத்தங்களிஷ்டந்தரணியிற்றுமடைந்தார்
செவ்வியகருணைகூர்ந்தசிவனருள்குமரனை
வவ்விநாயகனையென்றுமகத்தினுளனுசந்திப்பாம். (க)

அம்பிகாசகிதனைகியானந்தநடனஞ்செய்து
நம்பினோர்துன்பநீக்கிநற்சுகநல்காநின்ற
வெம்பிதாவானவீசனிருபதக்கமலந்தன்னை
நம்புவாந்துன்பநீங்கிநற்சுகமடைவதற்கே. (உ)

போற்றியநடனராசன்பொருவிலாவுருவந்தானே
யேற்றியகுரவனுகவிங்ஙனேவந்துதித்து
மாற்றிடவொணுதவெம்மின்மாசெலாமாற்றிற்றன்ரு
தோற்றியவந்தவாசான்றுணையடிதொழுதல்செய்வாம். (௩)

செகத்தினுற்பத்தியாதிசெய்திடுமேதுவேனு
மகண்டதன்வடிவினின்றுமற்பமும்பேதியாதாய்ப்
புகழ்ந்தநன்றுணர்ந்தோருக்குப்பூரணவான்மாவாகத்
திகழ்ந்தவானந்தவுண்மைத்தெளிவினைத்தியானஞ்செய்வாம். (௪)

சுத்தவேதாந்தமெல்லாஞ்சொல்லியபொருள்கடம்மை
மெத்தவுங்கருணையாலேமேன்மைசேர்பாஷியாதி
தத்துவநூல்கள்கொண்டேதடையறத்தெரியவைத்த
வுத்தமச்சங்கராசானுண்மையையுளத்துள்வைப்பாம். (௫)

அருண்மிகுசங்கராசானருளினாலமைத்ததான
மருளறுவிவேகசூடாமணியெனுங்கிரந்தநூலைக்
கருதருநடனராசன்கருணையாந்திறமைகொண்டே
வரதமிழ்க்கவிதையாகவழுவறவமைக்கலுற்றேன். (௬)

ஈனமில்சங்கராசானிசைத்தவிஞ்ஞானநூலை
யூனமாமென்றன்வாக்காலுரைத்திடுநீதியோரின்
வானமர்பானுதானேவையகம்விளக்கிவைப்ப
வூனமின்மினியுநானீதொளிர்ப்பனென்றுரைத்தல்போலாம். (௭)

ஆதியில்வேதமுந்தானச்சமுற்றன்பினோடே
நேதிநேதியெனும்வாக்காணிகழ்த்தியநுண்மையான
போதவானந்தவுண்மைப்பொருளினையானுரைக்கு
நீதிதானெவ்விதத்து[illegible]லைமையாய்ப்புகுவதற்கே. (௮)

பரவுசாதனசம்பத்திபாங்குடன்குரவன்சேவை
சிரவணமனனந்தியானஞ்சீர்பெருஞ்சமாதிஞான
மிருவிதவீடுரைக்குமிந்தநூற்கவியிலக்க
மரியநற்பாயிரத்தோடறுநூற்றியெழுபத்தொன்றும். (௯)

பாயிரமுற்றிற்று.

விவேகசூடாமணிமூலம்.

நூல்.

சகலவேதாந்த நூலிற்சார்ந்தசித்தாந்தமெல்லா
மிகவுமேகோசரிக்குமெய்ம்மையாய்மற்றமான
மகிலமுங்கோசரிக்காவகண்டவானந்தமாகி
நிகழுநங்கோவிந்தாசானிலைமையைப்போற்றல்செய்வாம். (௧)

சீவருக்கிங்குமாந்தர்சென்மமேயரிதாமத்தின்
மேவுதற்கரிதாமாண்மைமேவினுமறையோன்றன்மை
யாவதற்கரிதாமத்தையடைகினும்வேதந்தானே
யோவலற்றோதுமார்க்கமொன்றுவதரியதாகும். (௨)

அத்தினும்வித்துவானாயமைவதிங்கரிதாமத்தின்
வித்தரவான்மானாத்மவிவேகமெத்தரிதேயத்தின்
சுத்தமாஞானமற்றேசொரூபமாய்நிற்குமுத்தி
புத்திசேரனந்தசென்மப்புண்ணியமன்றியெய்தா. (௩)

பேசியவடைவாயாவும்பெற்றிடவொண்ணுதேனு
மீசனல்லருளினாலேயிசைவதாயருமையான
மாசிலாமநுடத்தன்மைமன்னியமுமூக்ஷுத்தன்மை
தேசிகராஜன்சேவைத்திறமையிம்மூன்றும்போதும். (௪)

எத்திறவேதுவாலோவெய்தியுமநுடத்தேக
மத்திலுமாரணார்த்தமறிவதற்கேதுவாக
வொத்தவாண்மையையடைந்துமுண்மையாமுத்திசேர
வெத்தனஞ்செய்யாமூடனென்றுமான்மாவைக்கொன்றோன். (௫)

பின்னமிலான்மரூபம்பிரிவறத்தானாய்நின்று
மன்னவனசத்தாந்தேகமாதியையபிமானித்திங்
குன்னியவான்மரூபமுணர்ந்துதானடையாதத்தாற்
றன்னுடையான்மரூபந்தன்னினைக்கொன்றவன்றான். (௬)

அருமையாமநுடத்தேகமடைந்ததிலாண்மைதன்னை
மருவியும்யாவன்றன்சேர்மாசிலாப்பயனைவேண்டித்
தரணியில்முயன்றிடாமற்றவிருவனவனையன்றி
யொருவனுமூடனுண்டோவுள்ளவாறோருங்காலை. (எ)

ஓதியபலவாநூலையொழுங்குறப்படித்துமென்னத்
தீதிலாத்தேவர்தம்மைத்தினமுமர்ச்சித்துமென்ன
நீதியாங்கன்மமியாவுநித்தமுஞ்செய்துமென்னக்
கோதிலாத்தேவர்தம்மைக்குறித்துபாசித்துமென்ன. (அ)

ஈதலாலின்னமிங்ஙனெத்தனையியற்றியென்ன
வாதியாம்பரசிவைக்கியமறிந்திடுமறிவாலன்றி
யோதொனுக்கற்பகோடியுற்றகாலத்திலுலுங்
கோதிலாமுத்திசித்திகூடுவதென்றுமில்லை. (கூ)

வித்தமாதியினுலென்றும்விமலமாமுத்தியாசை
வைத்திடவேண்டாமென்னும்வரமானசுருதிதானே
மெத்தியகன்மங்கட்குமெய்முத்தியேதுத்தன்மை
சுத்தமாயில்லையென்றுதுலங்கவேசொல்லுதன்றோ. (கo)

ஆகையால்வித்துவான்றனமலமாமுத்திசேர
வாகியசுகவிருப்பம்வரையறவிடுத்துமேலோ
ஞகினநல்லாசானையடைந்தவனுபதேசித்த
மேவகமாம்பொருளிற்சித்தமிருத்தியேமுயலவேண்டும். (கக)

அனிசமிப்பவமாம்பவ்வுமிழ்ந்திடுந்தன்னைத்தானே
இனியயோகத்தினுலேயெய்தியசொரூபஞான
மெனுமஹாநாவாய்கொண்டேயிப்பவவாரிநின்றுங்
கனபரப்பிரமமாகுங்கரையின்மேலேற்றவேண்டும். (கஉ)

புத்திரர்மாதர்வித்தம்பொருந்துமேடனையைவிட்டிவ்
வத்திரமானகன்மமனைத்தையுமறவேதள்ளிப்
புத்திமானானதீரன்பொருந்தியபவத்தைவிட்டு
முத்தியாம்பேற்றைச்சேரமுயற்சிசெய்திடவேவேண்டும். (கஙு)

சித்தசுத்தியினைச்சேரச்செய்தகன்மங்களன்றி
வத்துவின்ஞானஞ்சேரவகுத்தகன்மங்களன்று
வத்துவின் ஞானஞ்சேரல்வரவிசாரத்தினாலே
சித்தியாங்கோடிகன்மஞ்செய்யினுஞ்சித்தியாகா. (கச)

அருவிசாரத்தினாலுமாத்தனின்வாய்மையாலும்
பிரமைதனால்வந்தசர்ப்பப்பீதிதுன்பங்கள்போக்கும்
பரிசுடைப்பழுதைஞானம்பாரினில்வருவதன்றி
மருவியமற்றொன்றாலுமற்றதுவாராதேபோல். (கரு)

அறவிசாரத்தினாலுமாத்தனின்வாய்மையாலு
மறிபொருளுண்மைதன்னையறியலாமகுதையன்றிச்
செறியுநீராடலானஞ்செய் திடும்பிராணாயாம
முறுசெயல்யாதினாலுமுண்மையையுணரவொண்ணா. (கசு)

தீதிலாவதிகாரிக்குத்திரவிசாரத்தினாலே
கோதிலாஞானசித்திகூடிடுஞ்செவ்விதாக
வேதமிறேசங்காலமீசனல்லருளேயாதி
யோதியஞானஞ்சேரவுறுதுணைக்காரணந்தான். (கள)

ஆதலாலான்மரூபமறியவிச்சித்ததீரன்
காதரீர்பிரமவித்தாய்க்கருணைவாரிதியாமாசான்
பாதமேயனுசரித்துப்பரமமாமான்மாத்தன்னின்
கோதிலாநல்விசாரங்குறைவறச்செய்யவேண்டும். (கஅ)

மேதையின்மிக்கோனாகிமிகுந்துளசாராசாரம்
யாதுமேகூட்டத்தள்ளவியல்புறுஞ்சதுரனாகி
யேதமினாலுரைத்தவிலக்கணமியாவும்பெற்றோ
னாதியாமான்மவித்தைக்கதிகாரியாவனன்றே. (கக)

உத்தமவிவேகியாகியுள்ளூறவிரக்தனாகி
நித்தமுஞ்சாந்தியாதிநின்மலக்குணநிறைந்த
வுத்தமமுமூக்ஷுவுக்கேயுண்மையாம்வஸ்துத்தன்னின்
யுத்தமவிசாரஞ்செய்யயோக்கியத்தன்மையுண்டால். (உ0)

சாதனநான்கதாகச்சாற்றலாமேலோராலே
யோதியவதிகாரிக்கியுரைத்தவீதிருக்குங்காலே
போதமாம்பிரமநிட்டைபொருந்தலாமீதிலாக்காற்
கோதிலாவர்தநிட்டைகூடுவதென்றுமில்லை. (உக)

நித்தியாநித்தியங்கணிகழ்த்தியவிவேகமொன்று
மித்திலும்பரத்திலுஞ்சேரின்பிடைவிரதியொன்றுஞ்
சத்தியஞ்சமதமாதிசட்கசம்பத்தியொன்றுஞ்
சுத்தமாமுமூக்ஷுத்தன்மைசொல்லலாமற்றொன்றாக. (உஉ)

சத்தியம்பிரமமேயாஞ்சகமிதுமித்தையாமென்
றித்திறஞ்சாஸ்திரத்தாலெய்தியநிச்சயந்தா
னித்தியாநித்தியங்கணிகழ்த்தியவிவேகமென்று
சுத்தமாமேலோராலேசொல்லிடலாகுமன்றே. (உங)

அத்திரமானதேகமாதியாயயனையீறாய்
நித்தியமிலாததானநிகிலமாம்போக்கியத்தி
னத்திறங்காண்டல்கேட்டலாதியாலறிந்தவற்றின்
மெத்தவுமருசிதானேமேன்மைசேர்விரதியாகும். (உச)

துன்னியவிடயமெல்லாந்தோடமென்றெண்ணுந்திருஷ்டி
தன்னினுலஃதினின்றுந்தடையிலாவிரதிபெற்று
மன்னியவிலக்கியத்தின்மாசறமனதைவைத்தல்
பன்னியசமமாமென்றேபகருவர்மேலோரெல்லாம். (உரு)

பரவியவிடயக்கூட்டம்பற்றியேதாவாநின்ற
விருவகையிந்தியத்தையித்திரணின்றுமீட்டு
மருவுதன்கோளகத்தில்மாறுதுநிற்கவைத்தல்
பொருவிலாத்தமமாமென்றேபுகலுவர்பெரியோரெல்லாம். (உசு)

உரைதருசமதமத்தினுறவினுற்சித்தமற்றும்
பரவியபாகியத்தைப்பற்றுதுதன்னிற்றுனே
திரமதாயூன்றினின்றுதிரமிலாக்கன்மமெல்லாம்
வரையறவிடுத்தருனேவரவுபரதியாமன்றே. (உஎ)

எத்துயரெய்தினுலுமேங்கியேயழுதிடாம
லத்துயர்நீங்குபாயமற்பமுஞ்செய்திடாமற்
புத்தியின்றயிரியத்தாற்பொருந்தியதுயரையெல்லா
மெத்தவுஞ்சகிக்குந்தன்மைமேன்மைசேர்திதிட்சையாகும். (உஅ)

சுத்தவேதாந்தநூலுஞ்சுக்குமக்குரவன்சொல்லுஞ்
சத்தியமென்பதாகச்சார்ந்திடுநிச்சயத்தை
வத்துவின்சாக்ஷாத்காரம்வருவதற்கேதுவான
வுத்தமச்சிரத்தையென்றேயுரைப்பருண்மையையுணர்ந்தோர். (உகூ)

சுத்தமாம்பிரமத்தின்கண்சுழலுறுஞ்சித்தந்தன்னை
யெத்தனமியாவினுலுமென்றுமேயூன்றவைத்தல்
சத்தியச்சமாதியென்றேசாற்றலாமகுதையன்றிச்
சித்தமேகின்றவாறேசெல்வதுசமாதியன்றல். (௩0)

ஆதியிலஞ்ஞானத்தாலாகியவகங்காராதி
யேதமாந்தேகமீறாயெய்தியபந்தமெல்லாந்
தீதறுஞானத்தாலேதீர்ப்பதற்கிச்சைசெய்த
லேதமில்முமுக்ஷுத்தன்மையென்றுகூறிடலாமன்றே. (௰௧)

மருவியமுமுக்ஷுத்தன்மைமந்தமத்திமமதேனும்
பெருகியவிரதியாலும்பெருஞ்சமமாதியாலுங்
குருவரனருளினாலுங்குறைவறவளர்ந்துகாலம்
பருவமெய்திடில்வாளாகாப்பயனையேநல்குமன்றே. (௰௨)

ஓதியவிரதியோடேயுத்தமமுமுக்ஷுத்தன்மை
தீதிலாதெவனிடத்திற்றீவிரமாயிருக்குங்
கோதிலாதவனிடத்தேகூடியசமதமாதி
நீதியாந்தன்பலத்தைநிகழவேநல்குமன்றே. (௰௩)

பன்னியவிரதியோடேபற்றியமுமுக்ஷுத்தன்மை
மன்னிடாதெவனிடத்தில்மந்தமாய்த்தானிருக்கு
மன்னவனிடத்திற்சாந்தியாதியாபாசமாகத்
துன்னிமெறுதேசத்திற்றோன்றியதோயமேபோல். (௰௪)

முத்தியினேதுவாகமொழியுபாயங்களுக்குட்
பத்தியேமிகவுமேலாய்ப்பகரலாமஃதேதென்னி
னித்தமுஞ்சொற்சொரூபநிகழ்த்தியவனுசந்தானம்
பத்திதானாகுமென்றேபகருவர்பரமுணர்ந்தோர். (௰௫)

ஓதுசாதனசம்பத்தியுள்ளவாறுற்றதீரன்
றீதிலாவான்மரூபந்திகழவேயுணரவேண்டி
யாதுமேயுணர்ந்துதன்னையெய்தினோர்பவபந்தத்தைக்
கோதறத்தீர்ப்போனை *குருவினைச்செல்லவேண்டும். (௰௬)

---

* குருவிடஞ்செல்லலென்றும் பாடம்.

சுருதியேமுதன்மானத்தாற்சொல்லியதனுட்டானித்துப்
பரவியபாவமற்றுப்பற்றெலாமற்றோனாகிப்
பிரமவித்தாகியந்தப்பிரமமேசார்ந்துகாட்டம்
மருவிடாவன்னிபோலமாசறச்சாந்தனாகி. (௩௭)

காரணமியாதுமின்றிக்கருணைவாரிதியேயாகிப்
பாரினிற்றன்னைப்பற்றிப்பணிந்தசாதுக்களுக்குப்
பூரணப்பந்துவாகிப்பொருந்தியவாசான்றன்னைச்
சேரலுற்றன்பினோடேசீடன்சேவிக்கவேண்டும். (௩௮)

பத்தியால்வணங்கிச்செய்தபலவிதச்சேவையாலே
மெத்தவுந்தன்னிடத்தின்மெய்யருண்மேவாநின்ற
வுத்தமக்குருவைநோக்கியுணரவேண்டியதையெல்லாம்
புத்திமானனசீடன்போற்றியேவினவவேண்டும். (௩௯)

நாதநின்சரணம்போற்றிநல்லருட்கடலேபோற்றி
பாதமேபணிந்தோருக்குப்பந்துவேபவமாம்பவ்வ
மீதினுள்மூழ்குமென்னையினியநற்கருணைகூர்ந்த
கோதினின்றிட்டினாவாய்கொண்டுமேலேற்றிவைப்பாய். (௪0)

படர்ந்ததீவினையேயாகும்பவனாலுலர்த்தப்பட்டுக்
கடந்திடாப்பவமேயாகுங்கானவன்னியினால்வெம்பித்
தொடர்ந்தபீதியினனீயேதுணையெனநம்புமென்னை
முடிந்திடாமரணமாதிமுடிவுறச்செய்துகாப்பாய். (௪௧)

சாதுவாய்ப்பூன்றராகிச்சாந்தராய்வசந்தகால
நீதிபோலுலகற்கிட்டநிறைப்பராய்ப்பவமாஞ்சிந்துப்
பீதியைக்கடந்துமற்றோர்பீதியுங்கடப்பிப்போரா
யோதியநீதிசேர் தமொத்தமேலோர்களுண்டால். (௪௨)

கருதியசூரியன்வெங்கதிரினலெரிக்கப்பட்ட
தரணியையிந்துதானே தண்கதிர்கொண்டுகாக்கும்
பரிசுபோற்பற்றினோரின்பவத்துயர்தீர்க்குஞ்சத்தி
சொரூபவித்தானமேமேலோர்சுபாவமேயாகுமன்றே. (௪௧)

நாதனேயுன்னையல்லாலனைதுஞ்சரணாய்க்காணேன்
யாதுமேயேதுவன்றியெய்தினோர்தம்மைக்காக்கு
நீதிதான்தம்மொத்தோர்க்குநித்தமுநிறைந்ததன்றே
வாதலாலருளாலென்னையாளுவதுன்பொறுப்பே. (௪௨)

பிரமவின்பானுபூதிபெற்றதாற்சீதமாகி
நிருமலமாகித்தூய்தாய்நின்முகக்கலசநின்று
வருவதாய்ச்சுகமேசெய்யும்வாக்கியச்சுதையினாலே
விரிபவக்கானத்தீயால்வெதும்பியவெனைநனைப்பாய். (௪௩)

நாதநின்கடாக்ஷதிருஷ்டிநாடுங்கண்பார்வைக்கிக்
கோதில்பாத்திரரேயாகிக்குமரவென்றெப்பப்பட்டோ
ரேதமில்பாக்கியத்தையிங்ஙனேயெய்தினோராய்க்
கேதமாமியாவும்விட்டுக்கேவலராவரன்றே. (௪௪)

இப்பவச்சிந்துதன்னையெவ்விதமியான்கடப்பே
னெப்படியிங்குபாயமேதுதான்கதியெனக்கா
மிப்படியென்றிவற்றையெளவுமுணர்கிலேனியா
னப்பனேயருளாலிந்தவரக்கைதீர்த்தென்னையாள்வாய். (௪௫)

இவ்விதமுரைத்துத்தன்னையியல்புடன்சரணெய்தி
வெவ்வியபவதாபத்தால்வெதும்பியசீடன்றன்னைச்
செவ்வியகருணைகூர்ந்தசீதளதிருஷ்ட்டியாலே
யவ்விதக்குரவனோக்கியபயமேயளிப்பானன்றே. (௪௬)

வித்துவா னுனவாசான் விதியுடன் றனையடைந்து
முத்தியை யிச்சிக்கிரும் மொழிக்கதைதன் கூய்ச்செய்யுஞ்
சத்தியுள்ள வனுய்க் கிருபாசாக் கிசேர்கிடனுக்குத்
தத்துவ வுபதேசத்தைத் தயையினுற் றனசெய்வான். (௪௯)

வித்துவா னுனவொப்பாவெருநே ரவினியுனக்குச்
சுத்தமாய்க் கேட்பிலைச் சுகம்பவக்கடக்க
வுத்தமவுபாயமுன் டிங்கனை பிலைநீ கன்றுன்னை
மெந்திருவினைகடந்தாரின் றனைக் *கதைநியமைசப்பாம். (௫௦)

வித்தைப்பவபயத்தை விரைவிலேநாசஞ்செய்யச்
சத்திசேசோருபாயந்தசகத்தினின் மேலாயுண்டு
புத்திரவதுவனீயும்பவக்கடல்கடந்து
நித்தமுறப்பரமானந்தநிலைமையதனைநீ நிற்பாய். (௫௧)

சத்துவேதாந்தநூவிற்சொல்லியபொருள்கடம்மி
னுத்தமவிசாரத்தாலேயுதித்திடுமுன்னைநுானம்
புத்திரவைற்றிறேலேபொருந்தியபவதுன்பங்க
ளித்துனையேனுமின்றியிறந்திடுமிங்குதானே. (௫௨)

மன்னியசிரத்தைதக்கிமாசிலாத்தியானம்யோகம்
பன்னியமுமுட்சுவைக்குப்பரமமாமுத்திசேரத்
துன்னியவேதவென்றேநுகளிலாவேதந்தானே
பன்னுவதால்வற்றைப்பற்றிநேறுார்பந்தமற்றுர். (௫௩)

உன்னியசிரத்தையாதியுந்தமசாதனத்தைத்
மன்னியேயிலைமையாகமாசறச்சாதித்தோர்க்கே
வின்னவென்றனைாவொன்றுவியப்புறமவித்தைசெய்த
பின்னமாக்கேதுபந்தப்பொய்ப்பிடிப்பின்றுங்கேளாய். (௫௪)

*கதிநியமைசப்பாமென்றும் பாடம்.

ஊனமில்பரமான்மாவாமுன்றனக்கஞ்ஞானத்தா
லீனமாயனான்மபந்தமிசைந்ததாலிச்சம்சார
மானதிவ்வான்மானான்மவறவிவேகத்துதித்த
ஞானமாங்கனலின்மூலாஞ்ஞானகாரியமெரிக்கும். (௫௫)

என்றவாசானைநோக்கியிந்தநற்சீடன்சொல்வா
னின்றுநான்செய்வினாவவீசனேயருளாற்கேட்பா
யுன்றனன்முகத்தினின்றுமுத்தரமிதற்குக்கேட்டு
நன்றதாம்பயனைநண்ணிநான்றுயர்தீர்வதற்கே. (௫௬)

ஏதுதான்பந்தமாகுமெவ்விதமீதுவந்த
தேதுதானிருப்பிதற்காமெவ்விதமீதிறக்கு
மேதுதானான்மாவாகுமேதனான்மாவுமாகு
மேதுதானான்மானான்மவியல்புணர்விவேகஞ்சொல்வாய். (௫௭)

ஈதுகேட்டாசான்சொல்வானிவ்வவித்தையினால்வந்த
வேதமாம்பந்தம்விட்டிங்கேகசிற்பிரமமாகச்
சாதுவேயிருப்பவிச்சைசாரலாற்றன்னியன்னீ
நீதொழில்யாவுஞ்செய்தோனின்குலந்தூய்தேசின்னால். (௫௮)

தந்தைகொள்றுணத்தைத்தீர்த் தூத்தளர்வறச்செய்வதற்கு
வந்ததன்மைந்தராதிவையகந்தன்னிலுண்டு
சிந்தைசேர்பந்தந்தன்னைச்சீக்கிரஞ்சிதைப்பதற்குப்
பந்துவாய்த்தன்னையன்றிப்பாரினிலாருமில்லை. (௫௯)

சென்னிசேர்பாரமாதிசெய்ததுன்பம்விடுக்க
வன்னியருலகிலுண்டிங்கடைந்ததன்பசியேயாதி
தன்னினால்வந்ததுன்பந்தவிர்த்திடத்தன்னையல்லா
லன்னியரில்லைப்பந்தமகற்றவுமிந்தவாறே. (௬௦)

பரவியமருந்தையுண்டபத்தியஞ்செய்வோனுக்கே
யரியனேபிணிகணீங்குமன்றிமற்றுருஞ்செய்த
கரும்மியாதொன்றினாலுங்கருதியபிணிசணீங்கா
வுரவியபந்தநீக்கமுரைத்தவின்னீதிபோலாம். (௬௧)

ஞானனல்விழியாற்றன்றனைற்பொருளுணரவேண்டு
மேனையோர்ஞானியைக்கொண்டிப்பொருளுணரவொண்ணு
தீனமி றனதுகண்ணாலிந்துவையுணர்வதன்றி
யேனையாதொன்றினாலுமிந்துவையுணரலாமோ. (௬௨)

கருதியவவித்தைகாமங்கன்மமேயாதியாகப்
பரவியபவமாகின்றபலமுறும்பாசந்தன்னைக்
கருதொணாக்கற்பகோடிகாலமோடிடினுமிந்தத்
தரணியிற்றன்னையல்லாற்றவிற்பதற்காரு*வல்லோர். (௬௩)

ஓங்கியபரசிவைக்கியமுணர்ந்திடுமுணர்வாலன்றிச்
சாங்கியமதத்தினாலுஞ்சார்ந்திடுமியோகத்தாலும்
வீங்கியகன்மத்தாலும்வேறுபாசனையினாலு
மோங்கியமுத்திப்பேறையொன்றுவதென்றுமில்லை. (௬௪)

தன்னுடைவீணைரூபத்தகமையுந்தந்தியாலே
பன்னியகானஞ்செய்யும்பான்மையுஞ்சபையின்கண்ணே
மன்னியசனங்கடம்மின்மனமகிழ்மாத்திரத்தைத்
துன்னிடச்செய்யுமன்றித்தோன்றலாந்தன்மைசெய்யா. (௬௫)

ஈதுபோலுயர்ந்தவாக்குமிசைந்தசொற்சாதுரிய
மோதியநூல்கடம்மினுரைசெயுஞ்சத்திப்பாங்கும்
பூதமாம்வித்தையுந்தன்யோகத்தின்பொருட்டாலன்றி
யேதமில்முத்திப்பேறையிசைவதின்பொருட்டாலன்றால். (௬௬)

*வல்லோனென்றும் பாடம்.

பரமமார்த்தத்துவத்தைப்பார்த்துநன்றுணர்ந்திடாக்காற்
பரவியநூல்களோதல்பலமேதுமிலாததாகும்
பரமமார்த்தத்துவத்தைப்பார்த்துநன்றுணர்ந்திடுங்காற்
பரவியநூல்களோதல்பலமேதுமிலாததேகாண். (௬௯)

ஆதலால்மனமயக்கமடைவதற்கேதுவான
காதல்செய்சப்தசாலக்கானனந்தன்னைவிட்டுத்
தீதிலாப்பிரமவித்தாந் *தேசிகன்றன்னைச்சென்றிங்
கேதமில்பிரமந்தன்னையிலங்கவேயுணரவேண்டும். (௬௮)

பரவுமஞ்ஞானமாகும்பாம்பினாற்கடிக்கப்பட்டோர்க்
கருமையாம்பிரமஞானமாகியமருந்தையன்றி
மருவியமறைகளாலென்மற்றுளநூல்களாலென்
பரவியமருந்தினாலென்பகருமந்திரங்களாலென். (௬௯)

மருந்தினைப்புசியாவண்ணமருந்தெனும்வசனத்தாலே
பொருந்தியதனதுரோகம்போகுமோதங்குமுண்டோ
திருந்தியபிரமஞானத்திறமையைச்சேராவண்ணம்
பரிந்துநான்பிரமமென்றுபகரலாற்பந்தம்போமோ. (௭௦)

வீரராம்பகையோர்தம்மைவென்றிடாதகிலமான
பாரினுட்பாக்கியத்தைப்பாங்குறப்பற்றிடாதிங்
காருநானரசனென்றுவறைந்திடும்வசனத்தாலே
நீரனுமரசனாகித்திகழயோக்கியனோசொல்வாய். (௭௧)

திரிசியாசந்தன்னைத்திரமுறச்செய்திடாமற்
பிரமமாமான்மரூபம்பிறங்கவேயுணர்ந்திடாமற்
பரமமேநானென்றேநம்பகரல்மாத்திரமேயான
வுரையினாற்பிரமமாகவொன்றிடுமுத்தியுண்டோ. (௭௨)

* தேசிகனிடத்திற்சென்றென்றும் பாடம்.

தரணியுட்டனத்தைச்சேரத்தகைசேர்ராப்தனின்சொல்
தரணியையிளத்தலந்தத்தனத்தின்மேற்சிலையைத்தள்ளல்
மருவியேயெடுத்தலிந்தவாறெலாமியாதுமின்றி
விரிவுறுவாக்காற்றுனேவெளியுறவஃதுவாரா. (௭௩)

ஈதுபோற்பிரமவித்தினிடத்தினற்சிரவணத்தோ
டேதமில்மனனந்தியானமேகமாஞ்சமாதிஞான
மீதெலாமன்றிமாயையிருளினால்மறைக்கப்பட்ட
கோதிலாத்தன்சொரூபங்குதற்கமேகொண்டுமேவார். (௭௪)

ஆதலால்விவேகியானோரனைத்துபாயத்தினாலுந்
தீதிலாத்தற்சொரூபந்தெரிந்துபந்தம்விடுக்க
நீதியாய்த்தாங்கடாமேநித்தமுமுயலவேண்டும்
மோதுரோகாதிநீக்கமுயன்றிடுநீதியேபோல். (௭௫)

பாத்திரனனமைந்தாபகர்ந்திடுநின்வினாவல்
சாத்திரஞானிகட்குச்சம்மதமாகிமேலாய்ச்
சூத்திரமொந்தாகிச்சூக்குமப்பொருளுடைத்தாய்க்
காத்திரமெடாமுமுக்ஷுக்கருதிடத்தக்கதாகும். (௭௬)

புரிந்தவிவ்வினாவலுக்குப்பொருந்தியவுத்தரத்தைப்
பரிந்துநாமின்றுனக்குப்பகருவம்பவபந்தத்தால்
வருந்தியநீயிவற்றைமனத்தினேகாக்கிரத்தோ
டிருந்துகேளிவற்றாற்பந்தந்தானுடனேநீங்கும் (௭௭)

புத்திமானனமைந்தாபூரணமுத்திசேர
நித்தமில்லாததானநிலமாம்பொருள்களின்று
மெத்தவும்விரதிதன்னைமேவுதல்முந்தியது
சித்தமார்சாந்திதாந்திதிதிட்சையும்பின்னரேது. (௭௮)

பின்புதன்கன்மமியாவும்பேணியே துறப்பதேது
பின்புவேதாந்தவர்த்தம்பிறங்கவேகேட்டலேது
பின்புதான்கேட்டவர்த்தம்பிரித்துணர்மனனமேது
பின்பிடைவிடாமலென்றும்பேணிய தியானமேது. (௭௯)

சத்தியநிர்விகற்ப சமாதியாலமைவதான
வத்துவின்சாக்ஷாத்காரவலியினாற்பரமானந்த
முத்தியையிவ்விடத்தேமுமுக்ஷு தான்பெற்றுநிற்ப
னுத்தமமுத்திசேருமொழுங்கிதேயுண்மையீதே. (௮௦)

விரிவுறுமான்மானான்மவிவேகமியாதுறுதியாக
வரியனேயின்றுநின்னாலறிந்திடத்தக்கதத்தை
யுரைசெயக்கேட்டுநன்றாயுளத்தினுட்டரியவற்றிற்
புரையனான்மாவைமுன்னம்புகலுவாம்பொருந்திக்கேளாய். (௮௧)

மச்சைமேதசுவெலும்புமாமிசமுதிரஞ்சர்ம
மிச்சைசெய்சுக்கிலமிவ்வேழுதாதுக்களூற்றிவ்
வுச்சமாஞ்சிரசுபாதமூருகைமுதுகுமார்பென்
றிச்சடவங்கோபாங்கமியாவையுமிசைந்ததாகி. (௮௨)

இயானெனதென்னவெங்குமியாவருமறிவதாகி
யீனமாமோகமெல்லாமிருப்பதற்கிடமேயான
வூனமாமிவ்வுடம்பேயொன்றியதூலதேக
மானதென்றுரைப்பர்மைந்தாவகிலமுமறிந்தமேலோர். (௮௩)

சுத்தியவானமாதிச்சூக்குமப்பஞ்சபூதம்
புத்திரவொன்றிலொன்றுபுகுந்துபஞ்சீகரித்து
மெத்தவுந்தூலமாகிமேவியதூலவாக்கைக்
கொத்தகாரணமதாகவொன்றிமெற்றுங்கேளாய். (௮௪)

மருவியபஞ்சபூதமாத்திரையைந்துமெங்கும்
புரிவுசெய்சத்தமாதிப்புலன்களாய்ச்சீவருக்குக்
கருதியசுகமளிக்கக்காரணம்போலேதோன்றும்
பரவியவவைகடம்மைப்பற்றினோர்கெடுவதைக்கேள். (௮௫)

பேசியபுலன்கடம்மிற்பேதையாமென்றமூர்க்க
ராசையாம்பாசத்தாலேயழுந்தவேகட்டுண்டாரோ
தூசுறுதங்கள்கன்மத்தூதனாலிழுக்கப்பட்டு
வீசவேகீழுமேலும்வெறிதவரலைந்துசோர்வர். (௮௬)

உலவுபாம்பானைவிட்டிலூருமீன்வண்டிவ்வைந்து
மொலிமுதற்புலனொன்றொன்றினுவந்ததாலிறக்குமாகிற்
புலனிவையைந்தினும்மால்பொருந்தியபுருடன்சேரும்
பலவிதத்துன்பந்தன்னைப்பகர்ந்திடமுடியுமோசொல். (௮௭)

தவ்வியபுலனனைத்துந்தன்னுடைத்துகளினாலே
வெவ்வியகருநாகத்தின்விடத்தினுங்கொடிதேயாகுங்
கவ்வியவவ்விடந்தான்கடித்தவுற்றவனைக்கொல்லும்
தவ்வியபுலனினைத்தோன்றன்னையுங்கொல்லுதன்றே. (௮௮)

பரவியபுலன்கடம்மைப்பற்றியவாசையாகு
முரவியமாபாசத்தையுள்ளவாறறுத்தவன்று
னருமையாமுத்திப்பேறையடைந்திடச்சதுரன்மற்றேன்
கருதியவாறுநூலுங்கற்கினுஞ்சதுரனன்றல். (௮௯)

திடமிலாவிரதியோடேதீர்க்கமாம்பவமாகின்ற
கடலுடைக்கரையிலேறக்காதல்செய்முமுக்ஷுத்தன்னை
யடருமால்நக்கரந்தானவனுடைக்கண்டத்திழ்த்திக்
கடலுடைமத்தியத்திற்கடிதியில்மூழ்கவைக்கும். (௯௦)

ஆதலால்விடயவாசையாகியநக்கரத்தை
யாதொருமுமுக்ஷுவானோனிலங்கியவிவேகமாகுங்
கோதிலாவசியினாலேகொய்வனன்னவனேயாதும்
வாதகமிலாமலிந்தவாரிதிகடக்கவல்லோன். (௰௧)

சுத்தமாம்புத்தியன்றிச்சூழ்புலனெறியிற்சென்றோன்
மெத்தவுந்துன்பந்துஞ்சல்மேவுவன்மேலுமேலு
முத்தமப்புத்தியோடேயுயர்ந்தவராசான்சொல்லி
வைத்தநன்னெறிநடந்தோன்வரமானபயனேசார்வன். (௰௨)

நிச்சயமீதேமைந்தாநினக்குநன்முத்திசேர
விச்சையேயிருக்குமாகிலிப்புலனனைத்தையுநீ
துச்சமாம்விடத்தைப்போலத்தூரவேபோகத்தள்ளி
யுச்சமாநற்குணத்தையொழிவறவுவந்துசார்வாய் (௰௩)

நித்தமுமருட்களிப்புநேர்நடைபொறுமைமற்றுஞ்
சுத்தமாஞ்சாந்திதாந்திருக்கநூலுரைத்தமற்ற
வுத்தமக்குணமனைத்துமோங்கியசுதையைப்போலப்
புத்திரவன்பினோடேபுந்தியிற்பொருந்துவாயே. (௰௪)

சாதுவேசந்தநீசகலகாரியமும்விட்டே
யாதியில்லாவவித்தையாக்கியபந்தந்தன்னின்
கோதிலாமுத்திதன்னைக்குறைவறத்தேடுவாயிவ்
வேதமாந்தேகந்தன்னையெவளவுநம்பிடாதே. (௰௫)

மோதியவிந்தத்தேகம்முடிவிலேபரார்த்தமேயா
மீதினையாவன்காப்பவிச்சைசெய்தபிமானிப்ப
னோதியவன்றேகத்திலொன்றியவபிமானத்தாற்
கோதிலாத்தன்னான்மாவைக்குமரனேகொன்றவன்றான். (௰௬)

மருவியதேகங்காக்கும்மதியுடைத்தாகியாவ
னருமையாமான்மரூபமறிந்திடக்காதல்செய்வ
னுரவியநக்கரத்தையொன்றியதெப்பமென்று
கருதியாறுகடக்கவன்னோன்காதல்செய்கின்றவன்றான். (௯௭)

தேகமேயாதியானதிரளிலேதியங்காநின்ற
மோகமேபெரியகாலன்முமுக்ஷுவாம்புருடனுக்குச்
சோகமாரம்மோகத்தைச்சுத்தமாய்வென்றவன்றா
னேகமாமுத்திப்பேறையெய்திடச்சதுரனானோன். (௯௮)

மோகமியாதினைமுன்னுள்ளமுனிவர்கள்வென்றுநன்றா
யேகபூரணவான்மாவினேத்தியபதமடைந்தார்
தேகதாரஞ்சுதாதித்திரளிலேயிசைந்தவந்த
மோகமாகாலன்றன்னைமுழுதும்வென்றப்பதஞ்சேர். (௯௯)

மெத்தியதொக்குமேதைமேதசுமச்சையத்தி
சுத்தியநரம்பிரத்தஞ்சுழல்மலமூத்திரங்க
ளித்தனைவகைநிரம்பியிருக்குமித்தூலதேக
மித்தினும்வையகத்திலிகழ்ந்திடும்பொருள்வேறுண்டோ. (௧00)

மூந்தியகன்மத்தாலேமுன்சொனதூலபூதந்
தந்தவித்தூலதேகந்தடையிலாவான்மாவுக்குத்
தொந்தபோகம்புசிக்கத்தொடர்ந்தவோரிடமேயாகு
மிந்தவாக்கையினவத்தையிலங்குசாக்கிரமேயாகும். (௧0௧)

பெருகியகந்தமாலைபெண்முதல்விவிததூலப்
பொருள்களின்போகந்தன்னைப்புறத்துளபொறிகளாலே
கருதுமித்தேகத்தோடேகவ்வியதாதான்மியத்தாற்
பரவியவான்மாவுண்ணும்பகர்ந்தசாக்கிரமிதேயாம். (௧0௨)

ஆகையாற்சாக்கிரத்திலறியலாமிந்தத்தேகம்
வாகியபவமனைத்தும்வர்த்தநுபுருடர்க்கித்தா
லாகுமோரில்வாழ்வோனுக்கமைந்தவோரில்லம்போலப்
போகவாலயமேயாகும்புகலுடலான்மாவுக்கே. (௧௦௩)

ஓதியவித்தேகத்துக்குற்பவஞ்சரைமரித்தல்
சாதுவேபெருத்தலாதிசகலமுந்தருமமாகு
மேதமாஞ்சைசவமற்றெய்தியகவுமாராதி
யாதுமேயித்தேகத்திலிசைந்துளவவத்தையாகும். (௧௦௪)

வன்னவாச்சிரமமாதிவகுப்பிதன்னியமமாகும்
முன்னுமாறுவமானமுதலிதன்விசேடமாகு
மின்னல்செய்பிணிகளெல்லாமிருப்பிடமிந்தத்தூலந்
துன்னியசூக்கதேகத்தொடர்பினையினியிசைப்பாம். (௧௦௫)

சிரவணந்தொக்குச்சக்ஷுசிங்ஙுவைநாசியைந்தும்
பொருள்களையறிவதாலேபோதவிந்திரியமாகும்
பரவியவாக்குப்பாணிபாதபாயுருவுபஸ்தம்
கருமமேசெய்வதாலேகன்மவிந்திரியமாகும் (௧௦௬)

துன்னுமுட்கரணமொன்றேதோன்றியவிருத்தியாலே
மன்னியமனதுபுத்திமற்றகங்காரசித்த
மென்னவேநான்கதாகவிசைந்ததாமெவ்விடத்தும்
பன்னியவிதன்விருத்திப்பகுப்பினைப்பகரக்கேளாய். (௧௦௭)

விரிவுறுசங்கற்பாதிவிருத்தியால்மனமிதாகும்
பொருளுணர்நிச்சயத்தாற்புகன்றபுத்தியுமிதாகும்
பரவியவபிமானத்தாற்பகரகங்கரமுமீதாம்
பொருளனுசந்தானத்தாற்புகன்றசித்தமுமிதாமே. (௧௦௮)

விரிவுறும்பிராணனென்றேவிருத்தியின்பேதத்தாலே
பரவியபிராணபானன்பகர்வியானனுதானன்
னுரவியசமானனைந்தாமுதகசொன்னநிதானே
பரவியவிருத்தியாலேபலவிதமாவதேபோல். (௧0௯)

சிரவணமாதியைந்துஞ்செறிந்தவாக்காதியைந்தும்
மருபிராணாதியைந்துமமரும்வாணாதியைந்து
மிருதயமாதிநான்குமெய்தியவவித்தைகாமம்
பரவுகன்மமிவ்வெட்டும்பகர்புரியட்டகங்காண். (௧௧0)

ஈதுதான்சூக்கதேகமீதபஞ்சீகரித்த
பூதமேதந்ததாகும்பொருந்துவாதனையுடைத்தாஞ்
சாதமார்கன்மபோகச்சாதனமான்மாவுக்கி
தோதியவஞ்ஞானஞ்செய்யுபாதியாமநாதியீதாம். (௧௧௧)

கனவிதனவத்தையாமிக்கனவினிலுள்ளமொன்றே
நனவுகாலத்தனேகநாடுவாதனைகளாலே
தனியதாய்க்கர்த்துராதித்தன்மையையடைந்துதோன்றுஞ்
சொனவவத்தையிலேயான்மாசுத்தசிற்சோதியாகும். (௧௧௨)

சருவசான்றனவான்மாசாற்றியவவத்தைதன்னி
லொருமனோமாத்திரத்தையுபாதியாயுடைத்தாயங்கு
பரவியபாவமாதிப்பலவிதக்கன்மத்தோடு
மருவிடான்றனேயாகமாசறவிலங்காநிற்பன் (௧௧௩)

யாதினுலிந்தவான்மாவென்றுமேயசங்கனவ
னாதலாலவத்தையிதிலம்மனவுபாதியாலே
சாதமாங்கன்மமெல்லாஞ்சற்றுமேசாரமாட்டா
னதியாஞ்சோதியாகியகிலமும்விளக்கிவைப்பன். (௧௧௪)

அறிவுறுவான்மாவுக்கிங்ககிலமாந்தொழிலுஞ்செய்யச்
செறியுமிச்சூக்கதேகஞ்சேர்ந்தவோர்கரணமாகும்
முறியுளிவாச்சியாதிமுற்றுமோர்தச்சனுக்கிங்
குறுதொழில்யாவுஞ்செய்யவொன்றியகரணமேபோல். (௧௪௫)

ஓதியகரணந்தானேயுள்ளகன்மங்களெல்லா
நீதியாயான்மாமுன்பாய்நித்தமுஞ்செய்வதாலே
சாதுவேசகலத்துக்குஞ்சாக்ஷியாமான்மாவெந்தப்
போதுமேயசங்கமாகும்பொருந்திடாதொருவிகாரம். (௧௧௬)

மெத்தவும்பார்க்குந்தன்மைமெதுவதாய்ப்பார்க்குந்தன்மை
சுத்தமாய்ப்பாராத்தன்மைசுழன்றகண்குணதோடத்துக்
கொத்ததாய்வருவதாலேயுரைத்தவைகண்ணின்றர்மஞ்
சுத்தமாமான்மாவுக்குச்சொன்னவைதர்மமாகா. (௧௧௭)

ஈதுபோற்செவிட்டுத்தன்மையெய்தியமூகத்தன்மை
யாதிகள்சோத்திராதியடைந்ததர்மங்களாகும்
போதபூரணமாயாதும்பொருந்திடாவான்மாவுக்கிங்
கோதியவிகாரமெல்லாமொன்றியதர்மமன்றால். (௧௧௮)

பின்னுமுட்புறமார்மூச்சுப்பெற்றகொட்டாவிதும்மல்
மன்னியமரணமாதிமற்றுளசலனமியாவுந்
துன்னுபிராணாதிதர்மந்துயர்தருபசிதாகங்கள்
பன்னியபிராணனென்றின்பரவுதர்மங்களாகும். (௧௧௯)

ஆடுமுட்கரணமொன்றேயமைசிதாபாசத்தோடே
கூடியிச்சக்ஷுவாதிக்கூட்டமாமவயவத்தி
லோடிஞானென்பதாகவுரமதாயபிமானிக்கும்
பாடுமவ்வபிமானந்தான்பகையகங்காரமாகும். (௧௨௦)

அகங்கரங்கர்த்தாபோக்தாவஃதுநான்சத்துவாதி
யிருக்குமுக்குணவசத்தால்மேவியவவத்தைமூன்றும்
வருந்துதானனுபவிக்கும்வந்துளவிடயநன்றேற்
சுகிக்குமவ்விடயந்தீங்கேற்சோர்ந்திடுமஃதுதானே. (கஉக)

ஆதலாலின்பதுன்பமகங்காரத்தர்மமேயாஞ்
சாதுவேயகண்டானந்தசாகரவான்மாவுக்கீ
தேதுமேயில்லையென்றுமெய்தியவிடயமெல்லா
மோதுமான்மாப்பொருட்டாலொன்றிடும்பிரியமாக. (கஉஉ)

ஓதியவிடயந்தானேயுள்ளவாபிரியமாகா
தேதமிலான்மாத்தானேயெவர்க்குநற்பிரியமாகு
மாதலாலான்மாவென்றுமகண்டவானந்தமேயாந்
தூயதாமான்மாவுக்குத்துன்பமோர்காலுமில்லை. (கஉங)

புரிவுசெய்சுழுத்தியின்கண்புலனிலாவான்மானந்தந்
திரமதாயாவராலுந்தினமநுபவிக்கலாகுஞ்
சுருதிதான்பிரத்தியக்ஷந்தான்சொல்லியவைதிகந்தான்
பரவியவனுமானந்தான்பகர்ந்ததிற்பிரமாணங்கள். (கஉச)

அரியனேகாரணுக்கையடைவினியறையக்கேளா
யிருளவ்வியத்தமாயையேதமாமவித்தைப் * பேராய்த்
திரிகுணவடிவமாகித்திரிசியங்கட்குமேலாய்ப்
பரவியேயனாதியாமோர்பரசிவசத்தியுண்டால். (கஉரு)

தரணியிலந்தச்சத்திதன்னுடைக்காரியங்கொண்
டருமையாம்புத்திமான்களாகிநேரனுமானிக்கு
முருவமாய்ச்சகமனைத்துமொழுங்குறப்படைப்பதாகி
யொருவிதமிதாமென்னவுரைத்திடவொணுததாகும். (கஉசு)

---

* பெயராய் - என்றும்பாடம்.

ஈதுசத்தானதல்லவீதுதானசத்துமல்ல
வீதுமற்றுபயமல்லவீதுதான்பின்னமல்ல
வீதுமற்றபின்னமல்லவீதுதானுபயமல்ல
வீதுசாவயவமல்லவீதுநிரவயவமல்ல. (கஉஎ)

ஈதுமற்றுபயமல்லவிதுவிசித்திரமேயாகி
யாதிதென்றுணரவொண்ணாவநிர்வசநீயமாகு
நீதிலாப்பரசிவைக்கியத்தெரிவுதானிதையழிக்குஞ்
சாதுவேபழுதைஞானஞ்சர்ப்பமாலழிப்பதேபோல். (கஉஅ)

சகலருமறிவதானதன்னுடைக்காரியத்தால்
மிகவுமெங்கும்பிரசித்தமேவியமுக்குணந்தான்
புகல்பரன்சத்திக்குண்டுபுகன்றவிம்முக்குணத்தி
லகலிராசதகுணத்தாலாகும்விக்ஷேபசத்தி. (கஉகூ)

கிரியையேவடிவமாகிக்கிட்டிடும்பிரவிருத்தியெல்லாந்
தருவதற்கேதுவாகத்தங்கும்விக்ஷேபசத்தி
பரவியகாமமாதிப்பலதுயராதியான
விருதயவிகாரமெல்லாமீதினுலிசையுமென்றும். (கந௦)

உரவியகாமங்கோபமூலோபம்டம்பமகந்தை
மருளுறுமசூயையீர்ஷைமச்சரமுதல்விகாரந்
தரணியிலிராசதத்தின்றர்மமாமிக்குணந்தான்
புருடரின்பிரவிருத்திசெய்யும்புரையினற்பந்தவேது. (கநக)

இருளுறுதமகுணத்தாலீன்றதாவரணசத்தி
பரமமாம்வஸ்துவித்தாற்பார்க்கலாம்வேறேயாகப்
பிரிவுறுவிக்ஷேபத்தைப்பெற்றவேதுவினுலீதே
புருடரின்பவத்தினுக்குப்பூருவகாரணங்காண். (கநஉ)

பெரிதுபண்டிதனாலும்பிரக்ஞையுள்ளவனாலு
மருமையாஞ்சூக்குமார்த்தமறவறிந்தவனாலுஞ்
சருவவல்லபனாலுஞ்சாற்றுமாவரணசத்தி
மருவிருள்மூடப்பட்டோனியல்பினையியம்பக்கேளாய். (க௱ங)

அருமையாங்குரவன்மேலோரான்மரூபத்தையன்பா
லுரைதாய்வெருவிதத்தாலுணர்த்தினுமுணரானன்றேன்
மடமையாலாரோபித்தபேதமாம்பொருளைத்தானே
திடமெனுமன்றியென்றுந்தியங்கியேயவலம்பிப்பன். (க௱ச)

ஆதலாற்பொல்லாங்காகவமைந்ததாமதகுணத்திற்
சாதகமாயுரமேயாகச்சார்ந்தவாவரணசத்தி
சாதுவேயற்பராமேலசாலவுங்கடக்கவொண்ணா
தீதனையல்லபத்தையென்னவென்றுரைப்பமந்தோ (க௱ரு)

மதிறோடைசந்தோன்றன்னையேதுமேயறியாத்தன்மை
யோதினுமுணராத்தன்மையுணரினுமையஞ்சேர்கை
பேதமாயறியுந்தன்மைபேசியவிவைகடரா
மேதவிக்ஷேபமுந்தானென்றுமேயிழுத்தலைக்கும். (க௱சா)

நித்திரைசோம்பல்வெண்மைநிகலமுந்தவிர்தல்மோகம்
புத்தியின்சாட்டியாதிப்புகல்தமோகுணவிகார
மித்திறமுடைசந்தோனியாதுமெவ்வளவுமுணராவண்ணம்
நித்தமுந்தூங்கினோன்போலுநீண்டதூண்போலுநிற்பன். (க௱எ)

சத்துவகுணஞ்சலம்போற்சாலவுஞ்சுத்தமேனுந்
தொத்தியவிருகுணத்தைத்தொடர்ந்ததாற்பவத்துக்கேது
நித்தமுமான்மாவித்தினிகழ்வுறப்பதிவிம்பித்துச்
சத்தியசடமனைத்துஞ்சூரியன்போல்விளக்கும் (க௱அ)

புருடனன்முயற்சியாலேபூருவம்போலமெத்த
விருகுணமிகுந்திடாமலிலங்கியசத்துவத்தின்
மருவியதருமங்களாய்மானமில்லாமையாதி
வரியமரியமமாதிவரன்மிகுசிரத்தைபக்தி. (௧௩௯)

திரமுறுமுமுக்ஷுத்தன்மைதெய்வசம்பத்திமற்றும்
புரையுறுசெய்கையின்கண்பொருந்திடாமீட்சியாதி
சருவமுமிசிரமானசத்துவகுணத்தின்றர்மஞ்
சருவதாச்சுத்தமானசத்துவமகிமைகளாய். (௧௪௦)

சுத்தசத்துவகுணத்தின்சூக்குமத்தெளிவினாலே
நித்தியான்மாநுபூதிநிகழ்ந்திடும்பரமசாந்தி
சித்தியாந்திருப்திமேவுஞ்சேர்ந்திடுமிகக்களிப்பு
நித்தமுமானந்தஞ்செய்நின்மலநிட்டைகூடும். (௧௪௧)

இவ்விதமுக்குணத்தோடிசைந்தவவ்வியத்தசத்தி
செவ்வியவான்மாவுக்குச்சேர்ந்தகாரணவுடம்பாம்
இவ்விதப்பொறிமனங்கள்விருத்தியில்லாச்சுழுத்தி
யெய்வமாமிவ்வுடம்பினிசைந்துளவவத்தையாகும். (௧௪௨)

அகிலமாம்விதமுமானவறிவிலாச்சுழுத்தியின்க
ணிகல்மனம்வித்தாய்நிற்குமேதுமேயுணர்கிலோமியாஞ்
சுகமதாய்த்துயில்கின்றேமென்சொல்லிடும்பிரசித்தியாலே
மிகுசுகவான்மாத்தானேமிஞ்சியேயிதில்விளங்கும். (௧௪௩)

உடலுயிர்பொறிபுலன்களுமனமகங்காராதி
யிடர்தருவிகாரமியாவுமின்பதுன்பாதியுமற்
றடர்ககனாதிபூதமாதியாஞ்சகமனைத்து
மிடரவ்வியத்தமீறுமிவையெலாமநான்மாவாகும். (௧௪௪)

மாயைகாரியமேயானமகத்துவாதியாவிக்
காயமீறனையாவுங்கலங்கியபொய்மையாருக்
ஆயவைசொன்னதெல்லாங்தொகுத்தருண்மாவுமாகும்
நிறைதுக்காணனிரிஎனிகழ்வெனநினைதிடுமென்றும். (கசரு)

எத்தையுமுன்னுணர்ச்சிறாண்பக்குமிகழ்த்துமேகவலருமென்றும்
பத்தியேவர்னியபனக்கப்பாமான்மவருவந்துசொல்வாய்
நித்தமுற்றுளவன்றுமிகழ்ந்திடுமனப்புதிக்கு
மெத்தியபொருளோயாவிமெய்மையாய்நிற்குமான்மா. (கசசு)

இரிவிதுவைத்தைதகட்குத்திருத்தமாவாயாதி
விரிவுறுபருத்தேகவிலகுணமாதியாது
பருவியமைவிருத்திமுற்றின்பாவமியாவுங்
கருதியவைத்தைதுறன்றிக்கண்டிடுமேதுயான்மா. (கசஎ)

யாதனைத்திவையுங்காணுமியாதிவையனைத்துங்காணு
யாதுதான்புத்தியாதியாவையுஞ்சித்தாய்ச்செய்யும்
யாதிவைப்புத்தியாதியாவுஞ்சேவித்தாய்ச்செய்யா
தோதியவத்துதானேயுன்றுளதாயான்மாவாந்தா. (கசஅ)

யாதிறுஞ்சகமனைத்துமெய்துமேமலாகும்
யாதினைச்சகமனைத்துமெவையுமறாட்டா
யாவற்றுமேபொருளெனப்புவிச்சடமனைத்து
நிமொய்நிலைநிற்கின்றுளதாயான்மாவென்றும். (கசகூ)

...துடைக்கிமையங்கள்மெய்கிமனதுபுத்தி
...துதன்செய்கைகள்கன்சேவ விடப்பட்டதேபோற்
சாதுவமாகத்துயாதின்சானிதியாத்தித்தா
னீமியாய்ச்செல்லுநிதன்றுளதாயான்மாவும் (கருo)

தொத்தியவகங்காராதித்தூலமீறுனயாவுஞ்
சுத்தியபுலனனைத்துஞ்சுகாதியுங்கடமேபோல
நித்தியபோதமாகிநிலைமையாய்நிகழாநின்ற
வெத்திறலறியலாகுமீதுநின்றுன்மாவாகும். (கருக)

யாதினுலுயிரும்வாக்குமியாவுமேயியங்குமந்தப்
போதமாமந்தரான்மாப்பூரணன்புராணனென்றும்
பேதமிலகண்டானந்தன்பெருகியவேகரூபன்
சாதமார்விருத்திதோறுஞ்சாக்ஷியாய்ச்சார்ந்துநிற்பன். (கருஉ)

சாதுவேயித்தேகத்திற்சார்மனக்குகையின்கண்ணே
யோதுமவ்வியத்தவிண்ணிலொளிர்ந்திடுமிந்தவான்மாப்
பேதமாம்பொருளையெல்லாம்பெருகியதன்றேசாலே
நீதியாய்விளக்கும்விண்ணினிகழ்ந்திடுமிரவியேபோல். (கருங)

அடர்மனவகங்காரங்களாக்கியவிகாரமியாவு
முடல்பொறியுயிர்கள்செய்யுமூலைத்தலுமுணருமான்மா
சுடுகனலயப்பிண்டம்போற்சொல்லியவனைத்திறுேடுந்
தொடரினும்விகாரமேவான்சொற்பமுஞ்செய்தோருகான். (கருச)

சாதுவேயிந்தவான்மாசனனமாகான்மரிக்கா
னேதுமேவளர்வுறுன்மற்றிளைத்திடான்விகாரியாகா
னேதமாமிந்தத்தேகமிறக்கினுமிறவானித்தன்
பேதமாங்கடமிறக்கிற்பெருகுவானிறப்பதுண்டோ. (கருரு)

பத்தனேபகுதியாதிப்பகுப்பினுக்கெல்லாம்வேறுய்ச்
சுத்தசிற்சொருபமாகிச்சூழல்வுறுஞ்சதசத்தெல்லா
நித்தமும்விளக்கிவைத்துநிருவிசேஷம்பொருந்துஞ்
சத்தியப்பரமான்மாவேசாக்கிராதியிலிலங்கும். (கருசு)

நித்தமுநானானென்றேநிலைமையாய்நிகழாநின்று
புத்தியின்சாக்ஷியாகப்பொருந்தியபரமான்மாவை
சித்தவேகாக்கிரத்தைச்செறிந்துநான்பிரமமென்றே
புத்தியின்றெளிவினாலேபுலமுறவுணர்திமைந்தா. (௧௫௭)

நித்தமுநின்னான்மாவைநின்னிடைநீயுணர்ந்து
தத்தியசனனமாதித்தரங்கமாய்ப்பாரமற்ற
கத்துசம்சாரமாகுங்கடலினைக்கடந்துநன்றாய்ச்
சத்தியப்பிரமமாகிச்சார்பயன்சார்ந்துநிற்பாய். (௧௫௮)

அன்னியவனான்மாவின்கண்ணகமெனும்புத்திபந்த
மின்னதுபுருடர்க்கெல்லாமேதமாமஞ்ஞானத்தாற்
றுன்னியசனனமாதித்துயர்தருமேதுவாக
மன்னுமிவ்வஞ்ஞானத்தின்மயலினைமற்றுங்கேளாய். (௧௫௯)

புத்திரவெண்மையாலிப்பொய்யுடல்மெய்யென்றெண்ணி
யித்தினிலான்மபுந்தியிசைந்திதைப்புலன்களாலே
நித்தமும்வெகுவாய்க்காப்பர்நிகிலருங்கோசகார
மெத்துவாய்நூல்களாலேமேனியைக்காப்பதேபோல். (௧௬௦)

சதுரமேனயவிவேகத்தாற்சர்ப்பமேயிரச்சுவென்னும்
மதிநிகர்தமசினாலேமறைத்திடப்பட்டோர்க்கெல்லா
மதுவலாப்பொருளிடத்திலதுவெனும்புந்தியுண்டா
மதனினாலசத்தின்மாலேயனர்த்தமாம்பந்தமாமே. (௧௬௧)

அகண்டமாய்நித்தமாகியவிஞசியானபோத
மிருந்ததன்மகிமையாலேமிகவுமேவிளங்கிமெத்தத்
தகுந்ததன்னான்மாவையித்தமமயாவரணசத்தி
யிகழ்ந்திடமறைப்பதாகுமிராகுதானிரவியைப்போல் (௧௬௨)

நிருமலத்தேசினாலேநிகழ்ந்திடுந்தன்னான்மாவை
யிருளுமாவரணசத்தியிவ்விதமறைத்தலோடும்
புருடனிவ்வனான்மாவானபொய்யுடல்நானேயென்று
கருதுவன்மோகத்தாலேகாமமாதியினைச்சேர்வன். (௧௱௩)

பின்னரக்காமமாதிப்பெந்தவேதுக்களாலே
துன்னுவிக்ஷேபசத்திதுயர்தரும்புருடனுக்கு
முன்னுமாமோகமாகுமுதலையால்முழுங்கப்பட்டுத்
தன்னுடைச்சொரூபஞானந்தவிர்ந்தவன்றளர்வதைக்கேள். (௧௱௪)

அனையவன்மனவவத்தையகிலமுந்தன்னதென்றே
நனியபிமானஞ்செய்துநாடியவிடயமென்னு
நினைவுறுவிக்ஷேபத்தானிரம்பியவபாரமான
கனபவக்கடலின்மூழ்கிக்கலங்குவன்கதிகெட்டோனாய். (௧௱௫)

பானுவின்கிரணத்தாலேபடைத்துளமுகிலின்பந்தி
பானுரூபமறைத்துப்பரவியேவளருமாபோ
லானதன்னான்மாவின்கண்ணாகியவகங்காரந்தான்
மானமிலான்மரூபமறைத்துடன்வளருமன்றே. (௧௱௬)

அனகனேயானமைந்தாவழுந்தியமழைக்காலத்திற்
கனமுகிற்றிரளினாலேகதிரவன்மறைக்கப்பட்ட
தினமதிற்பனிமிகுந்துதியங்கியகொடியகாற்று
நனிபுவியிருக்கின்றோரைநண்ணியேதுயர்செய்மாபோல். (௧௱௭)

அகனுமாவரணசத்தியமலமாந்தன்னான்மாவை
யிகழவேமறைக்கும்போதிலேதவிக்ஷேபசத்தி
மிகவுமேமூடபுத்திமேவியபுருடன்றன்னை
வெகுவிதத்துயர்களாலேவிவிதமாய்வருத்தஞ்செய்யும். (௧௱௮)

சாதுவேசாற்றுகின்றசத்தியிவ்விரண்டினுனு
மேதமாமிந்தப்பந்தமிசைந்ததாம்புருடனுக்கிங்
கீதினல்மோகமுற்றேயெவனுமிவ்வனன்மாவாக
வோதியவுடலான்மாவென்றுன்னியேமயங்கலாலே. (௧௬௯)

விரிபவத்தருவினுக்குவீங்கியதமசேவித்தா
மருவுதேகான்மபுத்திமற்றதன்முளையாங்காமந்
தருவதன்றளிராங்கர்மந்தாக்கியசலமாந்தேக
மூரவடிக்கட்டையாகுமுயிர்களேபணைகளாகும். (௧௭௦)

பொறிகிளைநுனிகளாகும்புலன்களேமலர்களாகுஞ்
செறிபலவானகன்மஞ்செய்ததுன்பங்களியாவு
முறுபலமப்பலத்தையுண்பதுசீவனென்னும்
பறவையேயிவிதமாகப்பவத்தருபரவலாகும். (௧௭௧)

ஓதியவனன்மபந்தமூனவஞ்ஞானமூல
மீதுதானனாதியேனுமேகஞானத்திலீறுஞ்
சாதுவேசனனந்துஞ்சல்சரைபிணிமுதலாந்துன்பம்
யாதுமேயிவற்றினலேயிசைந்ததாஞ்சீவர்க்கெல்லாம். (௧௭௨)

கரணமார்தெளிவினலேகறையறத்திட்டப்பட்ட
வருமையாஞானமென்னுமசியினற்சிதையும்பந்தம்
பரவியவத்திராதிப்படைகள்மற்றனிலம்வன்னி
யுரவியகன்மகோடியொன்றினுஞ்சிதையமாட்டா. (௧௭௩)

சுருதியைநம்பினேர்க்குச்சொன்னதங்கன்மநிட்டை
மருவிடுமவற்றினலேமன்னிடுஞ்சித்தசுத்தி
பரவுமச்சுத்தியாலேபரமுணர்ஞானமுன்டாம்
விரிவுறுபவமவற்றல்வேருடனசிக்குமன்றே. (௧௭௪)

அன்னியமிலாதவான்மாவையடைந்துதன்சத்தியாலே
மன்னியவன்னமாதிமயமதாம்பஞ்சகோசந்
தன்னினால்மூடப்பட்டுத்தடையறவிளங்கலில்லை
முன்னியபாசிக்கொத்தால்மூடியவாவிநீர்போல். (௧௭௫)

ஓதியபாசிக்கொத்தையுதகத்தின்றொதுக்குங்காலை
சாதுவேபுருடனுக்குச்சலிலமேதூய்தாய்த்தோன்றித்
தீதறுதாகந்தாபந்தீர்ப்பதாய்ச்சுகமளிக்கு
மேதுவாயுதவுமின்றவியல்பினையிங்குகண்டோம். (௧௭௬)

இந்தவாபஞ்சகோசமிதனினையபவாதித்தாற்
சந்ததானந்தமாய்ச்சாலவிளங்காநின்ற
பெந்தமில்பரமான்மாவும்பிரத்தியக்கான்மாவாக
மைந்தனேதூய்தாய்த்தோன்றியாசுகமளிக்குமன்றே. (௧௭௭)

ஆகையால்விவேகியானோனடைந்துதன்பந்தநீக்க
வேகமாயான்மானான்மவிவேகமேசெய்யவேண்டு
மேகமாம்விவேகத்தாலேயுண்மையானதனித்தா
யேகமாம்பரமான்மாவையிங்கறிந்தின்பஞ்சார்வன். (௧௭௮)

மருவியமுஞ்சிப்புல்லின்மத்தியுளாணியைப்போற்
பிரிசியத்திரளினின்றுக்கிந்திருந்தன்றன்மையை
யருமையாம்புத்தியாலேயசங்கமாயசமமாக
மருவியதென்றுகண்டுமாசறவுருக்கவேண்டும். (௧௭௯)

இவ்விதம்வருத்தபின்னரிங்குளதிரிசியங்க
ளவ்விதமான்மாவென்றேயனிசமும்பிறவிலாநித்தத்
தவ்வுறவான்மாவாகத்தனியிலிருப்பவன்றன்
செவ்வியமுத்திப்பேறைச்சேர்ந்தவனனகமைந்தா. (௧௮௦)

அன்னமேமெய்தானாக்கைமேயன்னகோச
மன்னமுண்டாலதாம்பயமஃதிலாதேலிறக்கும்
துன்னியமேதையத்திதோல்முதற்கூட்டமான
வன்னதுறித்தசுத்தமாகினவான்மாவாகா. (௧௯௧)

சதுமுன்பின்னிலாதாயிடையிலுண்டாய்க்கணத்தில்
பேதமாய்விகாரமுற்றுப்பேதமோர்நியமமற்றுத்
தீதுதாய்க்கடமேபோலத்திரியமானதாலே
யாதியாயதுவிகாரமறிந்திடுமான்மாவாகா. (௧௯௨)

அத்தபாதாதியானவையவங்கொடிறுமான்மா
வுய்த்திருக்கின்றதாலுமொன்றியவத்தவத்துச்
சத்திகளியாதாலுஞ்சத்தமேவைப்பட்ட
வித்துணித்தேதகமென்றுமேவிடுமான்மாவாகா. (௧௯௩)

மோதியமேதையத்திமூத்திரமலமேயாதி
யாதுமேவிபம்பிமத்துவினாமாயுமலானா
தீதுடலெல்லீதத்திற்றீசுற்றமான்மாவாகு
ம்திகோமலமாருமான்மாவிதனிலன்னியமேயென்றும். (௧௯௪)

குதியவுடலைத்தீமெமாண்டுயாதர்மங்களாம
ஙிதுவைடயைத்தையாதியாதுமேமதியுற்றகதி
யாதுவதர்மாசுவுமாசுவைமத்தனின்மான்மாவுக்கில்
கினில்மேவுற்றுநான்மையென்றுமேசுபாவித்தம். (௧௯௫)

மெய்தமெதாக்கதியாதுமேமெயிபசுட்டமான
வேதுமாக்கேதுகாலேனன்றெனன்றுலென்றூடன்றுமென்
கோதிலாவிசாரிலன்குருமணமீக்கேகேறமான
வாதியமான்மருபமகமெனவறிவன்னாமத்தா. (௧௯௬)

உடலிதுநானேயென்றிங்குன்னுவன்மூடனேரே
னுடலுயிரிரண்டுநானென்றுன்னுவன்கருமஞானி
திடமுறுவிவேகஞானத்திறமுடைத்தானமேலோ
னிடரிலாச்சொரூபநானென்றெண்ணுவன்றன்னையென்றும். (கஅஎ)

மேதைதொக்கெலும்பேயாதிமேவியவாக்கையின்கண்
சாதுவேயான்மபுந்திசற்றுநீசார்ந்திடாதே
போதவானந்தவுண்மைப்பூரணசொரூபநானென்
றீதினைச்சார்ந்தேயென்றுமெய்திடுபரமசாந்தி. (கஅஅ)

மொழியும்வேதாந்தநீதிமுழுவதுந்தெரிந்தோனேனு
மழியுடலாதியின்கணத்தியாசத்தினாலே
யெழுமகம்புந்திதன்னையவன்விடானெம்மட்டம்மட்
டொழிவிலாமுத்தியென்னுமுரைத்தலுமவனுக்கில்லை. (கஅக)

உன்னுடைசாயாதேகமுன்பதிவிம்பவாக்கை
யுன்னுடைகனவுதேகமுன்மனோராச்சியாக்கை
யின்னதிலான்மபுந்தியேதுமீயியற்றுதேபோ
லின்னதூலாக்கைமீதுமீதைநீயியற்றிடாதே. (கக0)

ஓதுதேகான்மபுந்தியுணர்விலாமூடர்க்கெல்லா
மேதமாஞ்ஜனனமாதியின்னல்செய்வித்தேயாகு
மாதலால்முயற்சியாலேயதனைவிட்டுளத்தினுசந்
தீதறச்செய்யிவற்றுற்றிரும்பவிப்பவமேசாராய். (ககக)

ஐந்துகன்மேந்தியத்தோடமைபிராணன்கலந்து
மைந்தமுன்சொல்பிராணமயமெனுங்கோசமாகு
மிந்தகோசத்தினால்முன்னிசைத்தகோசநிறைந்து
வந்ததன்செய்கையெல்லாம்வலியுறச்செய்யாநிற்கும். (ககஉ)

உன்னியவாயுவைப்போலுள்ளிலும்வெளியிலும்போ
யின்னதின்விகாரமாகியெங்குமேவிட்டாகிட்ட
மன்னியந்தனதிதென்னவணுவுமேயறியாதத்தாற்
றின்னரும்பரவசத்தாற்பேசுமீதான்மாவாகா. (௧௧௩)

அனைகஞானேந்திரியங்களைந்துடன்மனங்கலந்து
மனமயகோசமீதுமமதைசெய்விகற்பவேது
தனைபலவிருத்திபேதங்கலந்ததாய்வலியுடைத்தாய்
முனமிசைக்கோசந்தன்னைமுற்றுமேபரவலாகும். (௧௧௪)

ஓதியபொறிகளென்னுமோமகர்த்தாக்களாலே
வாதனைவிறகினாலும்வருபுலனெய்யினாலுந்
தீதுறவளர்க்கப்பட்டுத்திரமுறச்சொலிக்காநின்ற
வோதியமனமயத்தீயுலகமெல்லாந்தகிக்கும். (௧௧௫)

மனதினையன்றிவேறாய்மற்றொருவவித்தையில்லை
மனதுதானவித்தையாகுமற்றிதேபந்தவேது
மனதுதான்வளரும்போதுமற்றெதும்வளர்ந்ததாகு
மனதுதானசிக்கும்போதுமற்றெதுநசித்ததாமே. (௧௧௬)

மனதுதன்சத்தியாலேமற்றொருபொருளுமில்லாக்
கனவினிற்போக்த்துராதிக்கற்பனையாவுஞ்செய்யு
மனையவாசாக்கிரத்துமகிலமுஞ்செய்வதாலே
மனதுடைவளர்வேயாகுமன்னியசகமனைத்தும். (௧௧௭)

சாறுவேசுழுத்தியின்கண்சலமனமொடுங்கும்போது
யாதுமேயணுவுமில்லையாவருமறிவரித்தை
யாதலாற்புருடனுக்கிவ்வசத்தியப்பவசம்பந்த
மேசதியமனத்தாலுண்டாமுண்மையிற்பவமேயில்லை. (௧௧௮)

வீசியகாற்றேமுன்னம்விண்மிசைமுகிலைச்சேர்த்துப்
பேசியவஃதேபின்னும்பெருமுகில்தீர்ப்பதேபோற்
றாசுறுமனமேமுன்னந்துன்பமார்பந்தஞ்செய்யும்
மாசறுமனமேமற்றுமாசுகவீடளிக்கும். (௧௯௯)

விரிமனந்தேகமாதிவிவிதமாம்விடயத்தின்கண்
புருடனுக்காசையைமுன்புரிந்ததாற்பந்தஞ்செய்யும்
மருவுமவ்விடயத்தின்கண்மற்றதேநஞ்சினைப்போல்
விரதியைத்திடமாய்ச்செய்துவிடுத்திடும்பந்தநின்றும். (௨௦௦)

பெருகியகயிற்றாலாவைப்பிணிப்பதும்விடுவதும்போற்
றிரிவிதக்குணங்கடம்மின்றிறமையாற்சீவனுக்கிங்
குணாதருமனதுதானேயுபயமுஞ்செய்வதாலே
பரவியபந்தமோக்ஷம்படைப்பதற்கேதுவீதே. (௨௦௧)

இதுதமோரசகுணங்களிசைந்துதான்மலினமாகித்
திதமுறுபந்தவேதுதிகழ்ந்திடுஞ்சத்துவத்தை
நிதமுமீதனுசரித்துநிருமலவடிவமாகி
யதிசயமுத்தியேதுவாயிடுமெனகமைந்தா. (௨௦௨)

கோதிலாவிவேகத்தாலுங்குறைவிலாவிரதியாலு
மீதுதான்சுத்தமாகியின்பவீடின்பொருட்டா
மாதலாற்புத்திமானாயமைந்துளமுமுக்ஷுவானோ
னோதுமிவ்விரண்டையுமுன்னுரமதாயடையவேண்டும். (௨௦௩)

மனமெனும்பெயருடைத்தாய்மகத்தானபுலியொன்றிந்தக்
கனமுறுவிடயமென்னுங்கானனத்தேசத்தின்க
ணனுதினஞ்சஞ்சரிக்குமாதலாலத்தேசத்தி
லணிசமுநல்முமுக்ஷுவற்பமுமணுகவேண்டா. (௨௦௪)

முன்னியதூலஞ்சூக்கமுதலியவிடயமியாவும்
வன்னவாச்சிரமமாதிவகுப்புடனுடலங்கன்மந்
துன்னியகுணங்களேதுதொடர்பயனிவையனைத்து
மன்னியசீவனுக்குமனமிதேபடைக்குமென்றும். (௨௦௫)

சிறுமனமசங்கபோதச்சீவனைமோகிப்பித்துக்
குறுகுடலிந்திரியாதிக்குணங்களாற்பந்திப்பித்து
வறிதுதன்செய்கையாகமருவியபலபோகத்தில்
வெறிதுநானெனதிதென்றேவிவிதமாய்மயக்குமென்றும். (௨௦௬)

துனியுறுமத்தியாசத்துகளினாலமனதேயிந்தக்
கனமுறுபவபந்தத்தைக்கற்பனைசெய்வதாகும்
நனித்மோரசவிகாரநண்ணிநல்விவேகமற்றோர்க்
கிணையதேஜனனமாதியின்னல்செய்கின்றவேது. (௨௦௭)

ஆதலாலான்மரூபமறிந்தபண்டிதர்களெல்லா
மோதியமனதேயென்றுமோங்கியவவித்தையென்பர்
மோதியகாற்றினாலேமுகிற்றிரள்சுழல்வதேபோ
லீதினாலிந்தஞாலமியாவுமேசுழலுதன்றே. (௨௦௮)

ஆதலால்முமூக்ஷுவானோனலைவுறுந்தன்மனத்தைச்
சூதிலாமுயற்சியாலேசோதிக்கவேண்டுமீது
சோதனைசெய்யப்பட்டுச்சுத்தமாயிற்குங்காலை
யோதியமுத்திசித்தியுள்ளங்கையிற்கனிநேராமே. (௨௦௯)

வீடினில்விருப்பத்தாலேவிவிதமாம்விடயத்தின்க
ணேடணைவிட்டுக்கன்மமியாவையுந்துறந்தன்போடே
நீடுறுஞ்சிரவணாதிநிஷ்டையினிற்பவன்றான்
றோடியமனோவிகாரமுழுவதும்விடுத்தோனாவன். (௨௧௦)

பரவியேயொடுங்கலாலும்பரிணாமியாதலாலும்
விரிதுயர்வடிவதாலும்விடயமாந்தன்மையாலு
முறைமனோமயகோசந்தானுணர்வுருவான்மாவாகாத்
தெரிவுருவானவான்மாத்திரிசியப்பொருளாமோசொல். (உ௧௧)

போதவிந்திரியமைந்தும்பொருந்தியபுந்தியேயிங்
கோதுவிஞ்ஞானகோசமுனைத்தவிக்கோசந்தானே
காதல்செய்விருத்தியோடேகலந்ததாய்க்கர்த்தாவாகிச்
சாதுவேபுருடனுக்குச்சமுசாரவேதுவாகும். (உ௧உ)

பகுதியின்விகாரமாகிப்பரமசிற்பதிவிம்பத்தின்
றிகழ்வினைத்தொடர்வதாலேதியங்கியகிரிகைஞானத்
தகமையையுடையதாகித்தாக்குதேகாதியின்க
ணகமகமெனவேயென்றுமறவுமீதபிமானிக்கும். (உ௧௩)

அகமெனுஞ்சுபாவமாகியநாதியாங்கோசமீதே
நிகிலமாம்விவகாரத்தைநிருவகிக்கின்றசீவன்
புகலறம்பாவமியாவும்பூருவவாதனைக்குத்
தகுவதாய்ச்செய்தவற்றாற்றுக்கியபயன்புசிக்கும். (உ௧௪)

விரிவுறுங்கோசமீதுவிசித்திரயோனிகட்குண்
மருவியேகீழுமேலுமாறுதிரியுமற்றும்
பரவியசாக்கிராதிப்பலவிதவவத்தைமேவும்
பிரிவுருசுகதுக்கங்கள்பெருகவேபுசிக்குமீதே. (உ௧௫)

தகவில்தேகாதிதன்னின்றர்மகன்மங்குணங்க
ளகுதிணச்சிரமமாதியகிலமுமெனதேயென்று
மிகவுமீதபிமானிக்குமெத்தவும்பரமான்மாவின்
றகமையைக்கிட்டலாலேதடையிலாதிதுவிளங்கும். (உ௧௬)

ஆதலாலான்மாவுக்கீதனுகியவுபாதியாகு
மோதியகரணங்கட்குளுளமெனுங்கரணத்தின்கண்
சோதியாயிலங்குமான்மாச்சுத்தகூடத்தனேனு
மீதினைமயலாலுனென்றெண்ணியேபவத்தைச்சாரும். (௨௧௭)
ஞானமெய்யானவான்மாநவையில்கூடத்தனேனு
மீனவிஞ்ஞானகோசமென்னுமிவ்வுபாதிசேர்ந்தே
யூனமார்ந்தாதான்மியத்தாலொன்றுசெய்கர்த்தாப்போலு
மேனையுண்போக்தாப்போலுமிலங்கிடுமெங்குமைந்தா. (௨௧௮)
நித்தமுமிந்தவான்மாநிகிலபூரணமேயேனும்
புத்தியின்றுதான்மியத்தாற்பொய்ப்பரிச்சேதமேவி
மித்தையாய்த்தன்னைத்தன்னின்மிகவுமே *வேருய்க்காணுங்
கொத்துறுமண்ணின்வேருய்க்குடத்தினைக்காண்பதேபோல். (௨௧௯)
புத்திரவான்மாவென்றும்பூரணவேகரூப
மொத்துளசுபாவமேனுமுபாதியின்சம்பந்தத்தா
லத்துடைத்தர்மந்தன்னையனுசரித்ததுபோற்றோன்று
மெத்தியவயோவிகாரமேவியவன்னியேபோல் (௨௨௦)
என்னனுங்குருவைநோக்கியீனமில்சீடன்கேட்பான்
பன்னியவான்மாவுக்குப்பகர்ந்தவிச்சீவபாவ
மன்னியமயலாலேனுமற்றுமேயெவற்ருலேனுந்
துன்னிடுமேலிவற்றிற்றோன்றியசங்கைசொல்வேன். (௨௨௧)
ஏதமாஞ்சீவபாவத்தேதுவாயிசையுபாதிக்
காதியில்லாததாலேயழிவிலாதாகவேண்டு
நாதனேயனாதிக்கெல்லாநாசமுமில்லையன்றோ
வாதலாற்சீவபாவமழிவிலாநித்தமாமே. (௨௨௨)

---

* வேறுபோலென்றும்பாடம்.

ஈதினலிச்சம்சாரமென்றுமேநீங்காதாமே
யாதலால்மோக்ஷப்பேறையடைந்திடுநீதியெங்ஙன
னுதனேயிந்தச்சங்கைநசிப்பதற்குத்தரத்தை
யோதிநீயருளுகென்னவுத்தரங்குரவன்சொல்வான். (உஉ௩)
விரிவுறுவிவேகமுற்றேய்விகிதமாய்வினவுகின்ற
யுரைசெயுமுத்தரத்தையுளத்துடனொருமையாய்க்கேள்
கருதொணுமயலினலேகற்பனையாவதெல்லா
மூரியநற்பிரமாணத்தாலோர்ந்திடிலுண்மையாகா. (உஉ௪)
ஒருவடிவொருவிகாரமோர்செயலோர்பற்றின்றி
மருவியவான்மாவின்கண்மன்னியமயலாலன்றி
யொருபொருட்புணர்ச்சியேனுமுண்மையாயொன்றமாட்டா
நிருமலக்ககனத்தின்கண்ணீலபீதாதியைப்போல். (உஉ௫)
பிரிவறுசாக்ஷியாகிப்பிரத்தியக்குருவமாகி
நிருமலநிருவிகாரநிர்க்குணபோதானந்தச்
சொருபமாமான்மாவுக்குச்சொல்லியசீவபாவம்
புரையுறுபுத்திதன்னின்பொய்மயலதனுற்றேன்றும். (உஉ௬)
ஓதியநீதியாகவூனமாமயலினலே
சாதமாஞ்சீவபாவஞ்சத்தியமாகாதென்று
மேதமாமயலிறக்கிலீதுடனிறந்துபோகு
மேதெனில்வத்துவாகாவியல்பினலனகமைந்தா. (உஉ௭)
தோதகமயலினலேதோன்றியபொருளுக்கெல்லா
மோதுமம்மயலெம்மட்டோவுண்மையுமந்தமட்டே
மோதியவிரச்சுசர்ப்பமுதல்மயலளவேதோன்றிக்
* காதுசெய்மயலிறக்குங்கணத்திலேயிறக்குதன்றே (உஉ௮)

---

* காதுசெய்மயலுமந்தக்கணத்திலேயிறக்குதன்றே - என்றும் பாடம்.

கணமுறுமவித்தையத்தின்காரியமானயாவும்
வினவிடிலஞ்ஞதியேனும்வித்தைநன்றுதிக்குங்காலே
யனகனேயணுவுமில்லாதழிந்திடுமையமில்லைக்
கனவுநன்னனவுறுங்காற்காணுமலழிவதேபோல். (உஉக)

ஆதியில்பிராகாபாவமஞ்ஞதியேயானபோது
மோதியவதற்குநாசமொப்பியநீதியேபோற்
சாதுவேயவித்தையாதிச்சஞ்சலவுபாதியெல்லா
மாதியில்லாததேனுமழிவதிலையமில்லை. (உ௩0)

ஊனமாம்புத்தியென்னுமுபாதியின்சம்பந்தத்தா
லீனமாஞ்சீவபாவமேகமாமான்மாவின்கண்
கானனீர்நிகரேயாகக்கற்பிதமாதலாலே
யானவீதுண்மையாகா *தநிர்வசநீயமாமே. (உ௩க)

புத்தியோடேபுணர்ச்சிபூரணவான்மாவுக்கு
மித்தியாஞானத்தாலேமேவியதாதலாலே
சத்தியஞானமொன்றாற்சாற்றியபுணர்ச்சிநீங்கும்
புத்திரமற்றொன்றாலப்புணர்ச்சிதானீங்காதென்றும். (உ௩உ)

நித்தமாம்பரசீவைக்கியநிகழ்த்தியஞானந்தானே
சத்தியஞானமென்றுசம்மதஞ்சுருதிக்கெல்லாஞ்
சுத்தமாமான்மாஞன்மசொரூபநல்விவேகத்தாலே
யத்திறஞானமுண்டாமாதலால்விவேகஞ்செய்க. (உ௩௩)

மலமுளசலத்தினின்றுமலத்தினைநீக்குங்காலை
சலமதுநிமலமாகிச்சகத்தினிற்றோன்றுமாறே
நிலையுறுதன்ஞன்மாவினின்றகங்காரமாதிப்
பலவிதவசத்தைநீக்கிற்பரமமாயான்மாத்தோன்றும். (உ௩௪)

---

*தநிர்வசநீயமேயாகுமென்றும்பாடம்.

ஆதலாலகங்காராதியகிலமாமசத்தைநயுநன்
னீதியாயான்மாவின்றுநித்தமுமீக்கவேண்டு
மோதுவிஞ்ஞானகோசமுண்மையாயான்மாவாகா
தேதெனிலனகமைந்தாவைதுவையியம்பக்கேளாய். ௨௧௫

சாதுவேவிகாரியாலுஞ்சடமதாந்தன்மையாலுங்
கீறுளவுடையதாலுந்திரிசியமாவதாலு
மேதுமேகியமன்றியிதுவியபசாரியாலு
மாதியாமான்மாவாகாதநித்தியமிந்தமாமோ. (௨௧௬)

பரமமாமானந்தத்தின்பதிவிம்பமதனைச்சார்ந்து
வருவமாமவித்தைவிர்த்தியோதுமானந்தகோசம்
பிரியமோதப்பிரமோதப்பிரிவுடைத்தாகியிட்ட
மருவிடம்போதிக்குமற்றகாலைத்தொடங்கும். (௨௧௭)

யாதொருகோசந்தன்னியாவருமுயற்சியன்றி
யோதுமானந்தமெய்யாயொன்றிநித்தஞ்சுகிப்பர்
போதுமனயக்கோசத்தின்பூரணவநுபவந்தான்
சாதுவாமறிஞருக்கேசந்ததஞ்சாரலாகும். (௨௧௮)

அனகனேசுழுத்தியின்கணானந்தமயகோசத்தி
னநுபவமிகவுந்தோன்றுமகிலமாஞ்சீவருக்கு
மினையதினநுபவந்தானிட்டநோக்காதியாலே
சொனகனவுகட்குட்சொற்பமாய்த்தோன்றுகிற்கும். (௨௧௯)

பரவுசோபாதியாலும்பருதியின்விகாரத்தாலுங்
கருதியபுண்ணியத்தின்காரியமாதலாலுந்
தரமுறுவிகாரக்கூட்டந்தன்னிலுட்பட்டதாலு
மருவுமானந்தகோசமாசிலாவான்மாவாகா. (௨௨௦)

இரிசியங்கட்டுமனோர்க்குறுஞ்சிகழ்ந்திடுக்கேதலைந்துதன்
மருவுமக்கட்டுமமாகான் மற்றுமின்றாமமேமவான்
பரிகமேபாற்பருஞ்சகோசப்பருப்பேனையுனைகுமான்மமா
மருவுமக்கோசமாகான்மற்றுமின்றாமமேமவான். (௨௪௧)

பாவியபருஞ்சகோசப்பருப்பினைபுகுத்தாலே
புலையபறவைபவாதித்துரப்பரிந்துவைப்படவாதுத்தின்
மருவியவைதியாமோனிவாவைகளன்டபோது
வருவமாய்ச்சாகுதானேவொருவையாய்மிகுந்திருத்தானாம் (௨௪௨)

விரிவுறுபருஞ்சகோசவிலக்ஷணவருமையாமிக்
கருதியவைத்துத்தூன்றின்கரியதாய்கிருவிகாப
கிருமலமேபாதானைக்கிலேமையாக்கமான்மாவை
பரியனேவிவேகியாகேஞானகமனைவறியவேண்டும். (௨௪௩)

என்னவாசானைநோக்கியேதமில்சீடன்சொல்வான்
சொன்னவிப்பருஞ்சகோசத்துமாய்மிக்கதையென்றே
யுன்னிருஞானத்தாலேயொழித்தபின்னன்றியா
மன்னுமுன்னியேயான்றிமற்றெறாதுமிங்குகாணேன். (௨௪௪)

ஆதலால்விவேகியானேஞானகமனைவறியுமென்னை
மேதுதானைவத்துவிங்குன்றுடைத்திலைச்சற்குருவாமியன்
போதியசீடனுக்கிவ்வத்துமக்குமான்சொல்வான்
சாதுவேச்சாமீதசகுமாவியுன்னாலசொன்றுய். (௨௪௫)

விரிவைக்காமாதிவிகாசமற்றதஞ்சீர்மை
யிருமையாமீனைமயாவெல்லாமிகிலியாதுவொருமியாவைத
நிருமலச்சிவமாய்த்தூய்தாய்நித்தநிச்சலமாய்நின்ற
பிரமமாந்தன்னான்மாவைப்பிரிவறவுணர்ந்தபோதே
புருடனற்சுத்தனாகிப்புகலுயரியாவும்விட்டுப்
பிரமமேயாவனிவாறுபேசுதேசுருதியெல்லாம். (௪௫௩)

கருதியதன்னான்மாவிற்கற்பிதமானமித்தைப்
பொருளினையெல்லாந்தள்ளப்போதுநிட்கிரியமாகிச்
சருவபூரணமாயொன்றாய்ச்சச்சிதானந்தமான
பரமமாம்பிரமநாமேபரமார்த்தமீதேயைந்தா. (௪௫௪)

தன்னுடைமனவிருத்திதன்னுடச்சொரூபமாகப்
பண்ணியநிருவிகற்பப்பரமமாம்பூரணத்தின்
மன்னியேசமாதிபெற்றால்மற்றொருவிகற்பமுந்தான்
றன்னெனிர்காணாதத்தாற்றத்வமாய்விகற்பமில்லை. (௪௫௫)

சோகமாஞாலமென்னுஞ்சொல்லியவிகற்பமெல்லா
மோகமாரசத்தேயாகுமொழியுமோர்விகாரமின்றி
யாகுமோர்வடிவுமின்றியகிலமாம்விசேடமின்றி
யேகமாம்வஸ்துவின்கணேதுதான்பேதஞ்சொல்லாய். (௪௫௬)

ஞாதுருஞானஞேயஞாலமாய்நவிலுகின்ற
யாதொருபொருளுமின்றியெவ்விகாரமுமேயின்றி
யேயாதுமோர்வடிவுமின்றியோர்விசேடமுமேயின்றி
மீதியாம்வஸ்துவின்கண்மேவியபேதமேதாம். (௪௫௭)

அற்பமும்விகாரமின்றியகிலமாம்வடிவுமின்றி
செப்பியவிசேடமின்றிச்செய்கையுமியாதுமின்றி
யற்பமில்கற்பகாலத்தாழிபோனிறைந்துநின்ற
வொப்பிலாப்பூரணத்திலொன்றியபேதமேதாம். (௪௫௮)

பரவியதேசுதன்னிற்பரம்பியவிருளேபோலப்
பிரமையினேதுவாகப்பேசியதமசியாதில்
விரிவறலயிக்குமந்தவிமலமாம்வஸ்துவான
வொருமையாம்பிரமத்தின்கணொன்றியபேதமேதாம். (௪௫௯)

ஒருவடிவாகவெங்குமோங்கியவஸ்துவின்கண்
மருவியபேதமென்னுமாற்றமுமுண்டோசொல்லா
யொருசுகவடிவாய்த்தானேயொன்றியசுழுத்தியின்கண்
கருதியபேதமேதுங்கண்டவராருமுண்டோ. (௪௬0)

நிருவிகற்பகமேயாகநிகழ்ந்துளபிரமந்தன்னை
யொருமையாயறிந்தபோதங்கொன்றியசகமேயில்லை
யிருளுறுமிரச்சுகண்டாலென்றுமேசர்ப்பமுண்டோ
மருவியதனைக்கண்டால்மற்றஇற்சலமுமுண்டோ. (௪௬௧)

இகழுமித்துவிதமியாவுமென்றுமேமித்தையாகும்
புகழுமத்துவிதமென்றும்போற்றியபரமார்த்தந்தான்
மகனேயிப்படியேநேராய்மறைமுடிவுரைக்ககண்டோஞ்
சுகசுழுத்தியிலுநித்தஞ்சுத்தவத்துவிதங்கண்டோம். (௬௱௨)

கற்பிதவஸ்துவுக்குக்கருதியவதிஷ்டானத்தோ
டொப்பியவபேதந்தன்னையுள்ளவாறறிஞரெல்லாங்
கற்பிதவிரச்சுசர்ப்பங்கானனீர்முதலிற்கண்டா
ரிப்படியிருக்கப்பேதமிசைத்திடல்பிரமையன்றே. (௬௱௩)

சித்தமேமூலமாகச்செறிந்தநுவிகற்பமெல்லாஞ்
சித்தமில்லாதபோதுசிறிதுமேவிகற்பமில்லைப்
புத்திரவாதலாலேபுகன்றசித்த ம்நசிக்க
நித்தமும்பூரணத்திணிலைமையாய்ச்சமாதிசெய்வாய். (௬௱௪)

சந்ததம்போதமாகிச்சா ந்தவானந்தமாகித்
தொந்தமாமுவமையின்றித்தொடருமோரளவுமின்றிப்
பந்தமில்புரணமானபரமத்தைவித்துவான்றன்
சிந்தையிற்சமாதியாலேசெவ்விதாயநுபவிப்பன். (௬௱௫)

ஈனமாஞ்செய்கையின்றியெய்தியமுடிவுமின்றி
யூனமாம்பங்கமின்றியோர்விகற்பமுமேயின்றி
வானெனப்புரணமானவஸ்துவைவித்துவான்றன்
ஞானநற்சமாதியாலேநானெனவநுபவிப்பன். (௬௱௬)

பகுதியின்விகாரமின்றிப்பாவனாதீதமாகித்
திகழுமோருவமையின்றித்திரசமரசமேயாகிப்
புகழ்பரிபுரணமானபொருளினைவித்துவான்று
ணிகழ்வுறுசமாதியாலேநித்தமுமநுபவிப்பன். (௬௱௭)

அகிலமாம்பிரமாணத்தாலனுகவொண்ணுததாகி
நிகழ்மறைப்பிரமாணத்தானித்தமுஞ்சித்திபெற்றே
யகமெனவிளங்குகின்றவகண்டத்தைவித்துவான்ருன்
றிகழ்வுறுசமாதியாலேதிடமாகவநுபவிப்பன். (௬௬௮)

நிலையிலாச்சனனமாதிநிகிலமாம்விகாரமின்றி
யலையிலாவாரிபோலவசைவறநிறைந்துநின்ற
பலவுருநாமமில்லாப்பரமத்தைவித்துவான்ருன்
சலனமில்சமாதியாலேசந்ததமநுபவிப்பன். (௬௬௯)

உதயமத்தமனமின்றியோர்குணவிகாரமின்றிச்
சததமுமுண்மையாகிச்சாந்தமாயேகமாகி
மிதமிலாப்புரணமானமேனியைவித்துவான்ருன்
றிதமுறுசமாதியாலேதிகழவேயநுபவிப்பன். (௬௭௦)

வளமுறுசமாதிபெற்றுவழுவிலாமனத்தனுகி
யளவிலாமகிமையுள்ளவகண்டமேயநுபவித்துத்
தளர்விலாமுயற்சியாலேசம்சாரபந்தத்தள்ளி
யெளிதிலாவாண்மைதன்னையின்றுநீஸபலஞ்செய்வாய். (௬௭௧)

சருவமாமுபாதியின்றிச்சச்சிதானந்தமாகி
யொருமையாயுள்ளந்தன்னிலுன்வடிவாகநின்ற
பொருவிலாப்பிரமந்தன்னைப்பொருந்திநீபாவிப்பாயேல்
மருவியசம்சாரத்தின்மார்க்கமேமற்றுஞ்செல்லாய். (௬௭௨)

விரிசிதாபாசனாலேவிருத்தியின்மார்க்கமாகப்
புருடனின்சாயைபோலப்பொய்யதாய்க்காணப்பட்ட
வுருவினைச்சவமேபோலவுணர்வினற்றூரத்தள்ளிப்
பெருமைசேர்மனத்தனேன்பின்பிதைச்சிந்தைசெய்யான். (௬௭௩)

ஆதலாலமலபோதானந்தமாமுன்னைநீயே
சாதுவேபற்றியிந்தச்சடமலவுபாதிதன்னைத்
தீதறத்தூரத்தள்ளுதிரும்பவுநினைத்திடாதே
கோதறத்தாம்வாந்தியன்னங்குறிப்பதுமசுசையயன்றே. (சஎச)

சச்சிதானந்தமானசாந்தமாம்பிரமத்தீயி
லிச்சடவுபாதிப்பஞ்சுயாவையுமெரித்துப்பின்பிவ்
வுச்சமாய்ப்போதானந்தவுண்மையாய்த்தூய்தாய்நின்ற
துச்சமில்பிரமமாகத்துலங்குவன்ஞானியென்றும். (சஎரு)

பலபிராரத்தகன்மபாசத்தினாலேகட்டுண்
டலையினுமிருக்கினுந்தன்னாக்கையைப்பொருளதாக
நிலைபெறுஞானிபேணாநிகழ்சுகப்பிரமத்தின்க
ணலைமனவிருத்திநன்றாயடங்கியேயிருப்பதாலே. (சஎசு)

அகண்டவானந்தான்மாவையனிசமுநானேயென்று
நிகழ்ந்திடவறிந்தஞானிநித்தமுமெதையிச்சித்துச்
சகந்தனிலென்னிமித்தஞ்சடமானதேகந்தன்னை
யகந்தனிலனுசரித்திங்கனுதினங்காப்பன்சொல்லாய். (சஎஎ)

தத்துவஞானியாகித்தகைமையுள்யோகியான
சுத்தமாஞ்சீவன்முத்தன்றொடர்பயன்றானேதென்னிற்
புத்திரபுந்தியாலேபூரணவானந்தத்தை
நித்தமுமுட்புறத்துநிகழவேயநுபவிப்பன். (சஎஅ)

மிகுந்துளவிராகத்துக்குமேவியபயனும்போதம்
பகர்ந்தவப்போதத்துக்குப்பயனுபரதியேயாகுஞ்
சுகந்தனினனுபவத்தாற்றொடர்வுறுசாந்திதானே
பகர்ந்தவவ்வுபரதிக்கிப்பரமானபயனாமைந்தா. (சஎகூ)

ஓதியவகையாய்மேன்மேலுறுபயனுதிக்குமாகிற்
சாதுவேகீழ்க்கீழானசாதனஞ்ஸபலமாகு
மோதியபயன்மேன்மேலுமுதித்திடாதாகிற்கீழ்க்கீழ்
நீதியாஞ்சாதனந்தானிஷ்பலமாகுமன்றே. (சஅ0)

மெத்தவுநிவர்த்தியென்னமேலானதிருப்தியென்ன
நித்தமுந்தானேதோன்றுநிகரிலானந்தமென்ன
வெத்திறத்துன்பநேரேயெய்தினுமபயமென்ன
வித்தனைவகையும்வித்தையின்றநற்பயனேயாகும். (சஅக)

விரிவதாயசுசியானவிவிதமாங்கன்மமியாதைப்
புருடன்முன்பிரமைசேர்ந்தபோதினிற்பொருந்திச்செய்தா
னருமையாம்விவேகந்தன்னையன்னவனடைந்தபின்பு
மிருளுறுமக்கன்மத்தையெவ்விதஞ்செய்வன்சொல்லாய். (சஅஉ)

நிலையிலாவசத்தினின்றுநிவிர்த்தியேவித்தையின்பே
றலைவுறும்பிரவிர்த்திதானேயவித்தையின்பேருமிவ்வா
றலைவுசெய்கானனீரேயாதியினிகழக்கண்டோ
மலதெனில்வித்துவானுக்கானநேர்பயன்வேறேதாம். (சஅங)

ஏதமாமஞ்ஞானத்தாலெய்தியமனமுடிச்சு
மூதுணர்ஞானவாளான்முழுவதுந்தீர்ந்தபின்னர்
யாதொருவிடயவிச்சையிலாதநல்வித்துவானுக்
கேதுதான்பிரவிர்த்திக்கிங்ஙனேதுவாமிசைப்பாய்மைந்தா. (சஅச)

வகுத்துளபோக்கியத்தின்வாதனையுண்டாகாமை
மிகுத்துளவிராகத்துக்குமேவியவவதியாகும்
பகுத்துளதேகமாதிபற்றியவகந்தைபின்பு
மகத்தினுளுண்டாகாமையவதியாம்போதத்துக்கே. (சஅரு)

சந்ததமுயற்சியாலேசச்சிதானந்தமான
சுந்தரப்பிரமத்தின்கண்ஞுக்கமாய்லீனமான
சிந்தையின்விருத்திமற்றுஞ்சிறிதுமேயுண்டாகாமை
மைந்தனேயவதியாகுமாசிலாவுபரதிக்கே. (௪௮௬)

நித்தமும்பிரமாகாரநிலைமையாய்நிற்றலாலே
யத்திரவாகியங்களறிந்திடாமனத்தனாகி
நித்திரையுற்றோன்போலுநினைவிலாப்பாலன்போலு
மத்திரவிடயபோகமனியராலறிந்தோனாகி. (௪௮௭)

சொப்பனந்தன்னிற்கண்டசொரூபமில்சகத்தைப்போலிக்
கற்பிதசகத்தையோரோர்காலமேகாண்போனாகி
யிப்படியுள்ளஞானியாவனேயவனேதன்னிய
னற்பமில்புண்ணியப்பேறடைந்தவனவனேபூச்சியன். (௪௮௮)

யாதொருசந்நியாசியேகமாம்பிரமத்தின்கண்
டிதரலீனமானசித்தனாய்ச்செய்கையின்றி
யேதுமேவிகாரமின்றியென்றுமேயின்பஞ்சார்வ
னோதியவன்னவன்றானொளிர்திடப்பிரக்ஞனானோன். (௪௮௯)

சோரனையகனைப்பற்றுஞ்சோரனையகியின்சித்தம்
பாரமாமனையின்செய்கைபற்றினுமவனிடத்தே
நிரமாய்நிற்பதேபோற்றிகழ்திடபிரக்ஞையைத்தான்
பூரணந்தன்னில்வைத்தோன்புகழ்திடப்பிரக்ஞனானோன். (௪௯௦)

சுத்தநற்பிரமசீவர்சொருபமாமைக்கியத்தை
நித்தமுங்கோசரித்துநிருவிகற்பகமேயான
சித்துமாத்திரவிருத்திசேர்பெரும்பிரக்ஞையித்தை
நித்தமும்பற்றிநின்றோனிமலனுஞ்சீவன்முத்தன். (௪௯௧)

தேகவிந்திரியமாதித்திரளிலேயகந்தையுமற்
றேயபொருள்கடம்மிலமைவுறுமமதையுந்தா
னேகமாயாவனுக்கிங்கெங்குமேயிலாததாகு
மோகமிலவனேசீவன்முத்தனென்றுரைக்கலாவன். (சகஉ)

நிலைபெறுஞானமுற்றுநிரந்தரவின்பம்பெற்று
வலைவுறுசகமறந்திங்கமர்ந்தவன்சீவன்முத்தன்
சல மனவிருத்திகெட்டுஞ்சாக்கிரமுற்றோனாகி
யிலகுசாக்கிரமுமின்றியிருப்பவன்சீவன்முத்தன். (சகங)

எவனிகழ்வாதனைக்கோளிலாதநல்ஞானமுற்றோ
னெவன்வெகுவிகற்பமானவிப்பவமியாவும்விட்டோ
னெவன்கலையுற்றோனுயுமேதுமேகலையற்றோனு
மவனிடர்பந்தமற்றவமலனுஞ்சீவன்முத்தன். (சகச)

சித்தமோடிருந்துமியாவன்சித்தமில்லாதிருப்பன்
பித்தையாய்ச்சாயைபோலிம்மேனிதான்றொடர்ந்தபோது
மத்திலேமமதையோடேயகந்தையைவிட்டோனியாவ
னித்தமுமவனேபந்தநீங்கியசீவன்முத்தன். (சகரு)

பூதகாலத்திறந்தபொருளினைச்சிந்தியாமை
யோதியவருகாலத்திலுறுபொருளோர்ந்திடாமை
யேதுமேநிகழ்காலத்திலெய்தினுமதிலுபேக்ஷை
யீதெலாஞ்சீவன்முத்தனிலக்கணமாகுமைந்தா. (சகசா)

ஏதமுங்குணமுஞ்சேர்ந்தவியல்பினால்வெவ்வேறான
யாதிலுஞ்சமமாம்பார்வையெய்தினோன்சீவன்முத்த
னேதியபார்வையாலேயொன்றியவிட்டாநிட்ட
மேதிலும்விகாரமற்றோனிலங்கியசீவன்முத்தன். (சகஎ)

பிரத்தியக்கபின்னமானபிரமவானந்தந்தன்னைக்
கருத்திலேயநுபவிக்கக்காதலுண்டானசித்த
விருத்தியைப்பற்றலாலேவெளியிலுமுளிலும்வேறு
கருத்துருஞானமற்றோன்களங்கமில்சீவன்முத்தன். (௪௯௮)

விரித்துளசகத்தினுக்கும்விமலமாம்பிரமத்துக்கும்
பிரத்தியக்கான்மாவுக்கும்பேசியபிரமத்துக்கும்
விருத்தமாம்பேதந்தன்னைவிருத்தியிலோர்காலேனுந்
தரித்திடுஞானமற்றோன்றகைமையுள்சீவன்முத்தன். (௪௯௯)

சடமானவித்தேகத்தைச்சாதுக்களர்ச்சித்தாலுந்
தொடர்வானவீதைமற்றோர்துட்டர்கள்பீடித்தாலுந்
திடமானஞானநிஷ்டைசேர்ந்துளதிறமையாலே
யிடராதசமபாவத்தையெய்தினோன்சீவன்முத்தன். (௫௦௦)

சுருதியின்பெலத்தினாலேசூக்குமவான்மாவுக்குப்
பிரமபாவத்தைநன்றாய்ப்பேணியிங்கறிந்தவன்றான்
மருவியபவபந்தத்தைமாசறவிடுத்தோனாகி
யருமையாங்கைவல்லியத்தையடைகுவனையமில்லை. (௫௦௧)

பேதமாய்நதியில்வந்தபிரவாகம்வாரியிற்போல்
யாதொருவெதியிடத்திலெய்தியவிடையமெல்லாங்
கோதிலாச்சொரூபமாகக்கூடியேலயிக்குமற்று
மேதுமேகலக்கஞ்செய்யாதின்னவன்சீவன்முத்தன். (௫௦௨)

பிரிந்திடாப்பிரமரூபம்பிரிவறத்தெரிந்தோனுக்குத்
திரும்பவுமுன்போலிந்தத்திரிசியப்பவமேயில்லை
யிருந்துதேற்பிரமந்தன்னையிவனறிந்தவனேயன்று
விரிந்துளபாகியத்தைவேண்டியவெகிர்முகன்றான். (௫௦௩)

முன்னமேதொடராநின்றமூலவாதனைவேகத்தாற்
பின்னுமிச்சம்சாரத்தைப்பேணுவன்பிரமஞானி
யென்னவொண்ணாதுவஸ்துவேகமென்றுணர்ந்ததாலே
சொன்னவாதனையனைத்துந்தொடர்வறச்சிதைந்ததன்றே. (௫௦௪)

மெத்தவும்பெண்மயக்கமேவினமூடன்றன்னின்
சித்தமுந்தாயிடத்திற்செல்லாதுநிற்குமாபோற்
சுத்தவானந்தமானசொரூபமேயுணர்ந்தோனுக்குஞ்
சித்தமிவ்விடையானந்தஞ்செல்லாதுநிற்குமன்றே. (௫௦௫)

நித்தமுஞ்சமாதிசெய்யுநிமலனாஞானிக்கோர்கால்
மித்தையாம்பாகியத்தில்மேவியதோற்றங்கண்டு
சுத்தமாஞ்சுருதியன்றேன்றொடர்பயன்கூடுமாறு
சத்திலாப்பிராரத்தத்தைச்சாற்றிடுஞ்சிலவிடத்தில். (௫௦௬)

தருபயனுதிப்பதெல்லாந்தான்செய்தகன்மமூலம்
பகருமக்கன்மமின்றேற்பற்றியபயனுமில்லைச்
சுகமுதலநுபவந்தான்றொடருமெம்மட்டும்மட்
டகமுறும்பிராரத்தத்தையறிஞனுக்கொப்பவேண்டும். (௫௦௭)

பிரமமேநாமென்றிவ்வாற்பெற்றுளஞானத்தாலே
சருவதாக்கற்பகோடிசஞ்சிதவினைநசிக்கு
மருளறுசாக்கிரத்தால்மயக்கமாஞ்சொப்பனத்திற்
கருதியகன்மமெல்லாங்காணாதுநசிக்குமாபோல். (௫௦௮)

பேதமாஞ்சொப்பனத்திற்பெலமதாய்ச்செய்யப்பட்ட
தீதிலாப்புண்ணியந்தான்றீங்குறுபாபமுந்தா
னேதுமேகனவைவிட்டிங்கெய்தியநனவுற்றோர்க்குச்
சாதுமேவநரகஞ்சுவர்க்கஞ்சார்ந்திடவேதுவாமோ. (௫௦௯)

நிருவிகற்பகமேயானநிருமலச்சமாதிகொண்டே
யொருமையாமுன்சொரூபமுணர்வதாந்திருஷ்டியாலே
மருடருமையமின்றிமாசறநோக்குவாயேற்
பிரியநீகேட்டவஸ்துபின்னரும்பேதியாதால். (ருசு௪)

தன்னிடைப்பொய்யவித்தைதந்தபந்தம்விடுத்துத்
துன்னியசச்சிதின்பச்சொரூபமாந்தனையேசார
மன்னுமன்னூல்கள்யுக்திமாகுருவசனமானம்
பின்னுநற்சுவாநுபூதிபெருகியபிரமாணங்காண். (ருசரு)

பந்தமும்மோக்ஷமுந்தன்பசியுடன்திருப்திதானுஞ்
சிந்தையின்ரோகமில்லாத்திறமையேமுதலனைத்து
மைந்தனேதாங்கடாமேமயலறவுணர்வர்மற்றோர்
வந்தவோரனுமானத்தால்வகுத்துளவிவைமதிப்பர். (ருசசா)

சுருதிகள்பொதுவேயாகச்சொல்லிடுமெப்படித்தாய்க்
குரவருமப்படித்தேகூறுவர்சீடனேநம்
பரசிவனருளாற்றந்தபரமுணரநுபவத்தால்
வரையிலாப்பவமாகின்றவாரிதிகடக்கவேண்டும். (ருசஎ)

சகலவேதாந்தநூலிற்சாரமாய்த்திருஷ்டிமூன்று
திகழுமத்திருஷ்டியாலேதிரிசியமியாவுநீக்கி
நிகழுமத்துவிதாகண்டநிருமலப்பிரமந்தன்னை
யகமெனவறிந்தவன்றானகண்டறைமுத்தனவன். (ருசஅ)

பரவியதிருஷ்டிமூன்றின்பகுப்பினைப்பகரக்கேளாய்
விரிவுறுவாததிருஷ்டிமித்தியாதிருஷ்டிமற்றும்
பிரிவெலாநீக்காநின்றபிறவிலாபதிருஷ்டிமூன்று
மிருமைதீரிவைகடம்மினிலக்கணமியம்புவாமே. (ருசக)

தன்
மருவியசுழுத்திபோலுமலடியின்மைந் போலும்
பிரமமாமென்னிடத்திற்பிறிதுபோற்காண்பதெல்லா
மொருவனுமேனுமில்லையுள்ளவனேனேயென்று
நிருமலப்பார்வைதானேநிகழ்த்தியவாததிருஷ்டி. (௫௬௦)

இருமைசேர்கனவுபோலுமிந்திரசாலம்போலும்
பிரமமாமென்னிடத்திற்பிறிதுபோற்காணப்பட்ட
சருவமுமித்தையாகுஞ்சத்தியனேனேயென்று
விரிவுறும்பார்வைதானேமித்தியாதிருஷ்டியாகும். (௫௬௧)

பரவியவாழிபோலும்பார்த்திடுங்கனவுபோலு
மொருசிதாகாசமானமுருவமாமென்னிடத்திற்
பிரிவுபோற்காண்பதெல்லாம்பிரமமானானேனேயென்று
பிரிவிலாப்பார்வைதானேபிறவிலாபதிருஷ்டியாகும். (௫௬௨)

ஓதியதிருஷ்டிமூன்றி லுளத்தினுள்ளிசைந்ததான
வேதொருதிருஷ்டியாலுமிருமையாந்திரிசியத்தைத்
திதறநீக்கிநித்தந்திருக்குமாத்திரமாய்நின்ற
பேதமில்பரமுணர்ந்துபேறினையடையவேண்டும். (௫௬௩)

பரவியதிருஷ்டிமூன்றும்பரசிதாகாசமான
பிரமஞானத்தினுக்குப்பேணியவேதுவேனும்
பிரிவிலாப்பார்வையாகும்பிறவிலாபதிருஷ்டிதானே
யொருமையாஞானஞ்சேரவுத்தமவேதுவாகும். (௫௬௪)

உன்னுடையகண்டமானவுண்மையாஞ்சொரூபந்தன்னை
யுன்னுடையநுபவத்தாலுற்றுநீயேயுணர்ந்து
பின்னமில்சீவன்முத்திப்பேறெனுமின்பம்பெற்று
நின்னிடைநிருவிகற்பநிலைமையாய்நீயிருப்பாய். (௫௬௫)

பரமமாம்வேதாந்தத்தின்பரமசித்தாந்தமீதே
பிரமமேசீவர்யாவும்பிரமமேசகமனைத்தும்
பிரியனேபிரமமாகப்பிரிவறவிருத்தல்மோக்ஷஞ்
சுருதியின்முடிவனைத்துஞ்சொன்னதிற்பிரமாணங்காண். (ருசசு)

என்னலுங்குரவன்வாக்காலே தமில்மறைமானத்தாற்
றன்னுடைமனனந்தன்னாற்றத்துவமறிந்துசீடன்
பின்னவிந்தியமடக்கிப்பேதமில்சமாதிபெற்றுத்
தன்னிலேயசலனாகத்தாளொருவிடத்திருந்தான். (ருசஎ)

இந்தவாசிறிதுகாலமேகமாம்பிரமத்தின்கண்
டொந்தமில்சமாதிதன்னைத்துகளிலாமனத்தாற்பெற்றுப்
பிந்தியன்னிஷ்டைவிட்டுப்பிரிந்துபேரின்பத்தோடே
யந்தமில்லாததன்னினனுபவமறையலுற்றான். (ருசஅ)

பிரமசீவைக்கியத்தைப்பேணினனறிந்ததாலே
பிரிவுசெய்புந்தியும்போய்ப்பிரவிர்த்தியாவுநீங்கி
யுருவிதுவருவிதன்றென்றொன்றையுமுணர்கிலேனியா
னொருமையாமிச்சுகத்துக்குற்றவோர்கரையுங்காணேன். (கூசரு)

விரும்பியசொரூபானந்தவிமலமாஞ்சுதையினாலே
நிரம்பியபிரமமாகுநின்மலவாரிதன்னின்
பரம்பியமகிமைதன்னைப்பகர்ந்திடவாக்கினாலுந்
தெரிந்திடமனத்தினாலுந்திறமையையடைந்தோரில்லை. (ருரு0)

சிந்துவிலாலாங்கட்டிசேர்ந்ததிற்கரைவதேபோ
லந்தமில்பிரமானந்தமாகியசிந்துதன்னின்
விந்துவின்மேலசாலேசமீது தான்வீழ்ந்தவென்றன்
புந்தியுமதிற்கரைந்துபூரணச்சுகமாயிற்றே. (ருருக)

பங்குறவின்றுகண்டபார்முதற்சகமனைத்து
மிங்குதானெவளவேனுமில்லையிதென்னேயென்னே
யெங்குதானேகலாய்ற்றேயாதினுனிக்கலாய்ற்றே
யெங்குதான்லீனமாய்ற்றேயிஃதுதானென்னேயென்னே. (௫௨)

பேதமிலகண்டானந்தப்பெயர்பெறுஞ்சுதைநிறைந்த
போதமாம்பிரமமென்னும்பூரணச்சிந்துவின்க
ணேதுதான்றள்ளத்தக்கதேதுதான்கூட்டத்தக்க
தேதுதான்வேறுகின்றதேதுதான்விருத்தமந்தோ. (௫௩)

பிரமமாசாகரத்திற்பிறிதினையொன்றுங்காணேன்
பிரமமாசாகரத்திற்பிறிதினையொன்றுங்கேளேன்
பிரமமாசாகரத்திற்பிறிதேதுமறிகிலேனியான்
பிரமவானந்தமாகப்பிரிவறவிருக்கின்றேனே. (௫௪)

தேசிகராசபோற்றிதெரிந்துளபெரியோய்போற்றி
பாசமற்றவனேபோற்றிபரமவுத்தமனேபோற்றி
யேசிலாவேகவின்பவிரதமாமுருவேபோற்றி
மாசிலாவிபுவேபோற்றிமாவருட்கடலேபோற்றி. (௫௫)

நின்னுடைக்கடாக்ஷமாகுநெருங்கியநிலவினாலே
யென்னுடைப்பவதாபத்தாலெய்தியதுன்பநீங்கி
யுன்னியவகண்டானந்தவுண்மையாமான்மரூப
மன்னினன்கணநேரத்தின்மகத்துவமடைந்தேனந்தோ. (௫௬)

நாதனின்னருளினாலேநவில்பவநக்கரத்தின்
பீதியைவிடுத்தோனானேன்பேறினைப்பெற்றோனானே
னேதருந்தன்யனானேனுள்ளபூரணமேயானேன்
சோதியாய்நித்யானந்தசொரூபமேயானேனந்தோ. (௫௭)

விவேகசூடாமணிமாலை.

சங்கமும்விட்டொழிந்தேனென [illegible]
[illegible]
[illegible]
பங்கமில்பூரணமானேன் [illegible]
[illegible] (௮௱௫)

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible] (௮௱௬)

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible] (௮௱௭)

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible] (௮௱௮)

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible] (௮௱௯)

[illegible]
[illegible]
[illegible]
[illegible] (௮௱௰)

பரசகிவானேன்பரசகிவாத்ம
வொருநிதாகாசமானவுருவமாம்பிரமமானேன்
சருவசான்றுநின்றசத்துத்போதமானே
னிருமமிரகங்காரநிருமலசொருபமானேன். (௫௬௪)

சகலபூதத்திடத்துஞ்சார்ந்தசாக்ஷியானே
னகிலமாஞ்சகத்தினுக்குமாதாரமானே
னொருமுன்போகம்போக்தாவெனவேறாய்த்தோன்றிற்
றருவிதமாமின்றுகாரேனாயினெனக்கேதுவந்தோ. (௫௬௫)

அகண்டமானக்குவித்தாமினவென்னிடத்திற்
பருதியாம்மாயுவின்றன்பலவிதச்சலனத்தாலே
வெருவிதரூபமாகும்விசித்திரவலைகள்தோன்றி
யருதுகளடங்கிடுமாமுலவெனக்கொன்றுமில்லை. (௫௬௬)

உலகர்களுஜெயாகவுந்தம்மத்தியாக
நிலைமையாவிருவிகற்பமிஷ்களவாடிவாமென்னிற்
பலவிதத்தாலாமிப்படிப்பிணைக்கும்வேகின்றவர்
கலைகளைக்கற்பனாநிகாலமிசைக்கற்பிப்பார்போல். (௫௬௭)

மற்பனைக்குந்தோதைப்பற்றியமுடாகேல
கற்பனாதிகடனைத்தைத்தங்களாங்கமயச்செய்யாவெதன்றும்
வெப்பநகனைரிகால்வியிதனங்களைக்கூறி
யப்பரஞ்சேருமொட்டிதாயாகுவதில்லையன்றே. (௫௬௮)

பாவியமானசம்போற்பலவிதவிகற்பமற்றே
னிர்விகற்பவிகற்பத்திடத்தமையுமதுவேற்பதிலர்த்து
நிர்வியமானபோல்லன்றுமுன்றிச்சலநிலைக்கேதன்
சுருதியமாயிலைபாலாங்களையுமெயதினேன் (௫௬௯)

சங்கமும்விட்டோனானேன் சரீரமுமற்றோனானேன்
லிங்கமுமிற்றோனானேன் லீனமாமனத்தனானேன்
துங்களைவற்றோனானேன் தாபமும்விட்டோனானேன்
பங்கமில்பூரணனானேன் பரமனின்னருளினாலே. (௫௰௯)

கத்துருபோக்துருத்துவங்கள் கற்பிதவிகாரமியாவு
நித்தமுமற்றாகின்றநிஷ்க்கிரியசொரூபமானேன்
சுத்தசித்சொரூபமானேன் சுத்தகேவலமுமானே
னித்தநற்சிவமேயானேனிபவனின்னருளினாலே. (௬௰)

கத்துருபோக்துருக்குங்காண்பவன்கேட்போனுக்கு
மெத்தவுஞ்சொல்வோனுக்குமேலதாஞ்சொரூபமானே
னித்தநிஷ்க்கிரியமாஇதரம்பியோரெல்லையற்ற
பத்தமில்பூரணமானவசங்கசிற்சொரூபமானேன். (௬௰௧)

தெரிந்திடும்பொருளானன்று தெரிந்திடாப்பொருளானன்று
விரிந்தனவிவைகளெல்லாம்விளக்கிநிற்சத்தமாகி
நிரந்தரமாகவெங்குநிரம்பியுள்வெளிகளின்றிப்
பொருந்தியவகண்டானந்தபோதமாம்பிரமமேநான். (௬௰௨)

பகருமோருவமையின்றிப்பழமையாயாதியின்றி
யகமிதுவதுவென்றில்லாததெனவிருப்பாயின்றிச்
சகலவடிவமாகிச்சத்துசித்துருவமாகி
நிகழுநித்தியவகண்டநின்மலப்பிரமமேநான். (௬௰௩)

பாவியமயனுமானேன் பரித்திடுமரியுமானே
னிருமைதீர்சிவனுமானேனீசனுமானேயானே
னருணற்சிவனுமானேனிவருமானேயானேன்
கருணைவாரிதியுன்றன்குறைவிலாவருளினாலே. (௬௰௪)

பரசுகீவானேன்பரசுகீவாற்ற
வொருநிராகாசமானவருவமாம்பிரமமானேன்
சருவசான்றுநின்றசத்துதபோதமானே
னிருமமநிரகங்காரநிருமலசொருபமானேன். (௫௯௪)

சகலபூதத்திடத்துஞ்சார்ந்துளசாக்ஷியானே
னிலமாருசகத்திறுக்குமாதிஷ்டானமானே
னொருதுமுன்போகம்போக்தாவெனவேறாய்த்தோன்றிற்
றதுவெலாமின்றாகானையாவினைனக்தோவக்தோ. (௫௯௫)

அகவுமானக்துசிக்ரவாடினவென்னிடத்திற்
பருதியாம்வாயுவின்றன்பலவிதச்சலனத்தாலே
லெருவிதருதாலமாகும்விசித்திரமேகன்றோன்றி
யருதுகடாங்கிறுமாறுவதெனக்கென்றில்லை. (௫௯௬)

உலகர்களுதியாகவுற்றதும்பத்தியாக
நிலைமையாதிருவிகற்பங்கள்வடிவாமென்னிற்
பலவிதத்தாலமாதிப்பருப்பினேக்கும்மெக்கின்றுர்
கலைகளங்கற்பமாதிகால்விசைகற்பிப்பார்போல். (௫௯௭)

பற்பலசித்திரத்தோவைதப்பழியருடாலே
கற்பிதமதிஷ்டானத்தைத்தக்கனாங்காயப்பெய்யாதென்றும்
வெப்புறுகானலினால்விரிவுறுங்கானற்பூமி
யப்பெருஞ்சேறுடைத்தாயாகுமதில்லையன்றே. (௫௯௮)

பாவியமகாசம்போற்பலவிதவிகற்பமற்றே
ளிரவிபோல்விளக்கம்பட்டுத்தளைவிறுந்தொழின்றே
யசவியமலைபோலென்றுமொன்றிலுமுறுவிற்றென்
கருவியமாமிமலமோரெவகையுமேயத்திறந்தேன். (௫௯௯)

பூதவாகாசமேகப்புணர்வினையடையாததேபோற்
போதமானானுந்தேகப்புணர்வினையடையவில்லை
யாதலாற்றேகதர்மமாகினநனுக்கனவு
மேதமாந்துயிலுமென்றுமேகமாமெனக்குமுண்டோ. (ருஎ0)

வாதகதேகமாதிவந்திடுபோயிடும்மற்
றேதமாங்கன்மஞ்செய்யுமெய்தியபயனைத்துய்க்குஞ்
சாதமேமுதல்விகாரஞ்சார்ந்திடுமாதலாலே
போதமானான்குலாலன்போலநிச்சலனேயென்றும். (ருஎக)

ஒருபகுப்பின்றியென்றுமோருருவாமெனக்கு
மருவுமோர்பிரவிர்த்தியில்லைமற்றொருநிவர்த்தியில்லை
கருதியவிண்போலெங்குங்கலந்திடைவெளியிலாம
லொருமையாய்நிறைந்தநானிங்குற்றதைச்செய்வோனுமேன். ()

இந்தியஞ்சித்தமின்றியியாதொருவிகாரமின்றி
வந்தவோர்வடிவமின்றிவானெனவகண்டபோதா
னந்தமாமெனக்குப்பாவநல்வினையொன்றுமில்லைச்
சுந்தரவேதமுந்தான்சொல்லுமிப்படியேயன்றோ. (ருஎந)

புருடனின்னிழலினோடேபொருந்தியதாபஞ்சீத
மருவியதீங்குநன்குமற்றிவையேதாகட்டுந்
தரணியலந்தச்சாயைதன்னின்வேறாகிநின்ற
புருடனுக்கிலாததேபோற்புகல்வினையெனக்குமில்லை. (ருஎச)

கிரியையங்கட்குவேறாய்த்திகழ்ந்துதாசீனமாகி
நிருவிகாரியுமேயாகிநிகழ்ந்திடுந்திருக்காமென்னைத்
கிரியைத்தருமமொன்றுஞ்சேர்ந்திடாதோரில்லத்தின்
றருமமங்குள்ளதீபந்தன்னினைச்சாரா தேபோல். (ருஎரு)

சந்ததமிரவிகன்மசாக்ஷியாயிருக்கின்றுப்போற்
ெறுந்தமாமயப்பிண்டத்தைத்தொடரனலெரிக்கின்றுப்போற்
சந்தியிலிரச்சுரூபஞ்சர்ப்பமேயாகின்றுப்போ
லந்தமில்கூடத்தான்மாவாகினநானுமாவேன். (௫௭௬)

ஒன்றினைச்செய்வோனுமற்றென்றினைச்செய்விப்போனு
மொன்றினைத்துய்ப்போனுமற்றென்றினைத்துய்ப்பிப்போனு
மொன்றினைக்காண்போனுமற்றென்றினைக்காண்பிப்போனு
மன்றுநான்சுயமேசோதியாகினவான்மாவானேன். (௫௭௭)

சலித்திடுமுபாதியோடேசார்ந்தசிற்பதிவிம்பத்தி
னலைத்தலைமூடராஞேராகுதினுக்கயலேயான
சலித்திடாவகண்டசித்தின்சத்ததாம்விம்பத்தின்கண்
செலுத்திநான்கர்த்தாபோக்தாசிதைந்தவனென்றுசோர்வர். (௫௭௮)

பரவியசலத்திற்கண்டபாஸ்கரன்பதிவிம்பத்தின்
மருவியதருமமியாதுமற்றவற்கிலாததேபோற்
றிரிவுறுமுபாதிசேர்ந்துதிகழ்சிதாபாசதர்ம
மொருசிதாகாசமானவுருவமாமெனக்குமில்லை. (௫௭௯)

செலத்திலோதலத்திலோவிச்செட்மானதூலதேக
மலைந்துதான்புரண்டபோதுமகுதுளதர்மந்தன்னைக்
கலந்திடேஞனியாதொன்றுங்கடத்துளதர்மந்தன்னைச்
சலித்திடாவாகாசந்தான்சற்றுமேசாரா தேபோல். (௫௮௦)

கர்த்துருபோக்துருத்துவங்கள்கலத்துவசடத்துவங்கள்
பெத்தமுத்தத்துவங்கள்பெரியசாதுத்துவாதி
புத்தியின்விகற்பமன்றிப்பூரணப்பிரமமான
சுத்தவத்துவிதாகண்டசொரூபமா *மெனக்கீதில்லை. (௫௮௧)

*மெனக்கோவில்லையென்றும் பாடம்.

பகுதியின்விகாரக்கூட்டம்பந்தமாமுயிரங்க
ளொருதுதானுதித்தபோதமேகசித்தாமெனக்கிங்
கருதிறலானியென்னையமலமாமாகாசத்தில்
முகிலிறடம்பரந்தான்முனைத்ததாலானியுண்டோ. (௫௮௨)

பகுதியேமுதலாய்த்தூலபரியந்தமானவிக்த
வகிலமாஞாலத்துக்குமதிஷ்டானமாயிலங்கிக்
ககனகோதரியந்தங்கலந்திடாச்சூக்கமாதி
நிகழுமத்துவிதாகண்டநின்மலப்பிரமமேநான். (௫௮௩)

உன்னியமாயைசெய்தவோர்விகற்பமுமேயின்றி
மன்னியபிரத்தியகான்மவடிவமாய்ப்புத்தியாலே
இன்னதென்றுணராவொண்ணாவின்பமாய்ச்சத்துச்சித்தாய்த்
துன்றுமத்துவிதாகண்டசொரூபமாம்பிரமமேநான். (௫௮௪)

சகலவாதாரமாகிச்சகலசாக்ஷியுமேயாகிச்
சகலவாகாரமாகிச்சகலபூரணமேயாகிச்
சகலமுமின்றித்தூய்தாயச்சுத்தமாய்ச்சலனமற்ற
வகமிலாநிருவிகற்பவத்துவப்பிரமமேநான். (௫௮௫)

ஒருசெயலொருவிகாரமொருபகிர்ப்போர்விகற்ப
மொருவுருவோராலம்பமொருவிகாசமுமேயின்றிச்
சருவமாய்ச்சருவான்மாவாய்ச்சருவமுந்தானடியொன்றுப்
பொருவிலாவகண்டானந்தபோதமாம்பிரமமேநான். (௫௮௬)

ஈசனேதிவ்வியமாகவிசைந்தினனருளினாலே
யாசிலாச்சொப்பிரகாசசொரூபசாம்பிராச்சியமிக்கடை
நீசனுமென்றனைநினைத்தமாய்ப்பெறலாயிற்றே
தேசிகேந்திரனேபோற்றிதிருப்பதம்போற்றிபோற்றி. (௫௮௭)

சனனமுமிறப்புமாதிசார்ந்ததாற்பொல்லாங்கான
கனமதாமாயைசெய்தகனவினில்வெருதாபத்தோ
டனிசமுமயங்கிச்சோர்ந்தவ்வகங்கரவியாக்கிரத்தாற்
றினமுமேதுன்பப்பட்டேனென்னைக்காத்தாய். (௫௮௮)

பன்னியசொப்பனத்தைப்பற்றியவென்னைநீயே
பின்னமில்பிரமஞானபெலத்திறற்போதிப்பித்திங்
கன்னசொப்பனமகற்றியகண்டவானந்தத்து
துன்னியுறுகச்செய்தாய்தந்தையேயருளினாலே. (௫௮௯)

குருபரவென்றனக்குக்குற்றமில்லாதசோதி
வரையிலாதிலமானவடிவமாகப்பிறங்கு
மொருமையாயகண்டானந்தவன்மையாமந்தச்சோதி
யுருவமேநோக்கியென்றுமுவந்துநான்போற்றல்செய்வேன். (௫௯௦)

இன்னவாபோற்றல்செய்திவ்வேகமாந்தத்துவத்தை
யன்னியமறவறிந்தவ்வகண்டவானந்தம்பெற்ற
துன்னியசீடன்றன்னைத்தகைமையுள்குரவனோக்கி
பின்னியவுதனாகளிவ்வசனஞ்சொன்னான். (௫௯௧)

அகண்டமாம்பிரமத்தோற்றமிலுமாதலாலே
சகத்திதுவென்றுதோற்றுஞ்சத்தியப்பிரமமேயென்
றகத்துறுமான்மநோக்காலறியசித்தனாய்நீ
விகாரமெவ்விடத்துமேகமாயென்றும்பார்ப்பாய். (௫௯௨)

சகத்தினிலைஞானசட்சுவைச்சார்ந்தோருக்குப்
பருத்துளவுருவமன்றிப்பார்க்கவேறிலாதுதேபோ
லகண்டமாம்பிரமவித்துக்கமலமாம்பிரமமன்றி
யகத்தினிலறியும்வண்ணமன்னியமொன்றுமில்லை. (௫௯௩)

எந்தநல்வித்துவான்றனிம்மகானந்தம்பற்றி
வந்ததன்னனுபவத்தைமாறிவாளாம்புலத்திற்
புந்தியால்ரமிப்பன்விண்ணிற்பூரணவிந்துதோன்றில்
மைந்தவோவியமேயானமதியினில்ரமிப்பாருண்டோ. (௫௧௪)

மித்தியாவிடயந்தன்னின்மிருக்கநுபவந்திருலே
யித்தனையேனுந்திருப்தியில்லையித்துன்பம்போகா
வத்வயானந்தான்மாவின்னனுபவநிஷ்டைதன்னை
நித்தமுநீயடைந்துநிறைசுகத்திருப்தனாவாய். (௫௧௫)

உன்னையேவெளியிலெங்குமொருமையாய்நோக்கிநிற்பா
யுன்னையேயொருமையாகவுள்ளிலுமுன்னிநிற்பா
யுன்னுடைச்சொருபமானவொழிவிலாப்பேரானந்தந்
தன்னையேபுசித்துக்காலந்தள்ளுமாமதியுடைத்தோய். (௫௧௬)

நிருவிகற்பகவகண்டநின்மலப்போதான்மாவில்
வருவிகற்பகமனைத்தும்வானமர்புரமேபோலா
மொருமையாமானந்தான்மவுருவநீயாகியென்றும்
பரமமாஞ்சாந்திபெற்றுப்பரமானமோனஞ்சார்வாய். (௫௧௭)

மித்தியாகற்பனைக்கிமிகவுமேயேதுவான
புத்திநற்பிரமரூபம்பொருந்தியேவெறிதிருந்த
வுத்தமசாந்தியித்தியுள்ளவாரகண்டானந்தம்
வித்துவானுக்குநித்தம்விமலமாய்விளங்காநிற்கும். (௫௧௮)

ஏகமாம்பிரமரூபமியானெனவுணர்ந்தகண்ட
மாகினவவ்வானந்தமநுபவிக்கின்றவர்க்கு
மோகவாதனையேயற்றமோனமாநிஷ்டையின்றிச்
சோகமில்சுகமளிக்கச்சொற்பமும்வேறொன்றில்லை. (௫௧௯)

தத்துவமறிந்தயோகிதன்சொரூபானந்தநி
னித்தமும்ரமிப்போனாகினைத்ததன்னிச்சைவாறே
புத்திரவிருப்பனிற்பன்போகுவன்படுப்பன்மற்று
மெத்தனைவிதமோவாகவிசைந்தவாறிலங்காநிற்பன். (௯௦௦)

ஏதமாம்பதிபந்தங்களின்றியவிருத்தியாகிப்
பேதமில்பிரமஞானம்பெற்றுளபெரியோருக்கு
யாதொருதேசங்காலமிலக்கியதிருஷ்டியாதி
யோதுமாசனமேயாதியொன்றுமேதேவையில்லை. (௯௦௧)

தன்னினையறிவதற்குத்தானொருநியமம்வேண்டா
மன்னியகடமிதென்றுமறைவறவறிவதற்குத்
துன்னியபொருள்விளக்குந்தோஷமில்சட்சுவன்றிப்
பின்னொருநியமந்தன்னைப்பேணுவதெங்குமுண்டோ. (௯௦௨)

அந்தவாநித்தசித்தமாகினவிவ்வான்மாவுஞ்
சொந்தமாமனவிருத்திசுத்தமாயிருக்கும்போது
சந்ததந்தானேதோன்றுஞ்சாருமோர்தேசங்காலம்
பிந்தியோர்சுத்தியாதிபேணுவதொன்றுமில்லை. (௯௦௩)

தேவதத்தோகமென்றுதெளிவுறுஞானத்துக்குத்
தேவையாய்வேறிங்கொன்றுந்தேடாத்திறமையேபோற்
பாவனப்பிரமவித்துப்பரமமேநானென்றிவ்வாற்
மேவியஞானத்துக்குமீளவோரபேக்ஷையில்லை. (௯௦௪)

இரவியாற்சகத்தைப்போலயாதொருபிரமதேசாற்
பரவியசகமனைத்தும்பகுப்புடன்விளக்கலாமோ
வொருமையாமந்தத்தேசையுண்மையில்லாததுச்ச
வுருவமாமெய்வனான்மாவுள்ளவாவிளக்கிவைக்கும். (௯௦௫)

வேதசாத்திரபுராணம்விவிதமாம்பூதமெல்லாம்
யாதொருதேசிஞலேயென் றுமேயிலங்காநிற்கும்
போதமாமந்தத்தேசாம்பூரணப்பிரமந்தன்னை
யேதுமேயிச்சகத்திலிலக்குவதெங்குமில்லை. (௬0௬)

ஓதியவிந்தவான்மாவேசுயஞ்சோதியாகித்
திதறவனந்தசத்தித்திகழ்வுடைத்தாகியெல்லாப்
போதமாமுருவமாகிப்பொருந்தியேமற்றொன்றுனு
மீதெனவுணரவொண்ணுவிலக்கியவடிவாய்நிற்கும். (௬0௭)

ஓதியவிவ்வான்மாவையுயர்ச்சிசேர்பிரமவித்திங்
கேதமேயில்லாவண்ணமியானெனவுணர்ந்துநன்றாய்த்
தீததாம்பந்தம்விட்டுத்திரமானமுத்திபெற்று
யாதொருதுன்பமின்றியேகமாயிலங்காநிற்பன். (௬0௮)

பிரிவிலானந்ததிருப்திபெற்றுளபிரமவித்து
மருவியவிடயத்தாலேமகிழ்வுசோர்வடையானத்தி
னுரவியகாமமாதியுற்றிடான்றன்னிடத்தே
சருவதாரமிப்போஞகிச்சந்ததமகிழ்ச்சிசார்வன். (௬0௯)

பரவியலீலைசெய்யும்பாலகன்பசிதாகங்கண்
மருவியதேகபீடைமற்றெதும்விட்டுலீலை
புரிவதுபோலஞானிபூரணசுகியேயாகி
நிருமமநிரகங்காரநிலைமையாய்ரமிப்பனித்தம். (௬௧0)

சிந்தைதைநியமிலாமற்செறிபலியன்னமுண்டு
வந்துறுகுளமேயாதிவாரியைப்பானஞ்செய்து
பந்தமாகியமமற்றுப்பயமறவனமயான
மெந்தவோரிடத்துஞானியேகஞய்த்துயில்செய்வாஞல். (௬௧௧)

சுத்தமாய்த்தோய்த்துலர்த்தாத்துகில்தரித்தலதுதிக்கை
வத்திரமாயுடுத்திவந்தபூமியில்நடந்து
வித்தரவேதாந்தத்தின்வீதியிற்சஞ்சரித்து
வித்துவான்பிரமத்தின்கண்விமலமாய்ரமிப்பனென்றும். (௫௧௨)

இன்னவென்றுணரவொண்ணாவிலக்கணமுடையோனாகிப்
பன்னியபாகியத்தைப்பற்றிடாவான்மஞானி
யன்னியரிச்சையாலேயமைவதைப்பாலனேபோற்
றன்னுடேகாபிமானத்துகளிறந்தவனாய்த்துய்ப்பன். (௫௧௩)

அகண்டமாஞ்சிதம்பரத்திலமர்ந்துளபிரமஞானி
திகம்பரமலதுமற்றோர்திவ்வியவம்பரந்தான்
வகுந்தவோர்வற்கலாதிவத்திரந்தானுடுத்திப்
பகுப்பிலாப்பாலன்பித்தன்பசாசெனச்சஞ்சரிப்பன். (௫௧௪)

தத்துவமறிந்தயோகிதன்னிலேதான்மகிழ்ந்து
நித்தமுஞ்சருவான்மாவாய்நிகழ்ந்துதன்னிச்சைவாறே
யெத்தனையுருவோவாகியேதுமேதான்புசித்திங்
கித்திறமேகனாகியெங்குமேசஞ்சரிப்பன். (௫௧௫)

ஒருமையாம்பரமானந்தமுற்றுளபிரமஞானி
யொருவிடமூடனேபோலொருவிடம்வித்துவான்போ
லொருவிடமன்னனேபோலொருவிடம்பித்தனேபோ
லொருவிடஞ்சாந்தனேபோலுலகினிற்சஞ்சரிப்பன். (௫௧௬)

ஒருவிடஞ்சாகரத்தோடொத்தவாசாரனாகி
யொருவிடநேயனாகியொருவிடநேயனன்றி
யொருவிடமறைவோனாகியொருவிடத்தெரிவோனாகி
யுரைதருமிவ்வாறெல்லாமொருவனேசஞ்சரிப்பன். (௫௧௭)

அருத்தமில்லாதிருந்துமனிசமுமவிழ்த்துச்சொல
னொருத்தனின்சகாயமற்றுமுமவியபெலமேசேர்வன்
திருப்திசெய்புசித்தலைத்தந்திருப்தியேயளித்துஞ்சேர்வன்
பொருந்தல்விஷமமெல்லாம்பொருந்தியசமமாய்ப்பார்ப்பன். ()

ஒன்றுவினைச்செய்யும்போதுமொன்றுமேசெய்யையற்றே
னொன்றுவினைத்துய்க்கும்போதுமொன்றுமேதுய்த்தலற்றே
னொன்றியசரீரியேனுமோர்சரீரமுமேயற்றே
னன்றியுமளவுபட்டோனெனினும்பூரணனன்றே. (௬௨௰)

உடைதரும்விதமேயாகவோர்சரீரமுமேயின்றி
யொருமையாயிலங்காநின்றவோங்கியபிரமவித்தைப்
பிரியமப்பிரியமற்றும்பேசியசுபாசுபங்கள்
மருவியேதொடாதென்றுமைந்தனேமற்றுங்கேளாய். (௬௨௧)

ஏதுமாந்தூலமாதிசைக்குவைபமானிக்கே
போதியசுகதுக்கங்களொன்றியசுபாசுபங்க
ளீதெலாமுண்டாம்பந்தமிசைந்திடாவான்மவித்துக்
கேதுதான்சுகதுக்கங்களேதுதான்சுபாசுபங்கள். (௬௨௨)

சசியினையிராகுவாலேவிழுங்கப்பட்டோன்போலப்
பாவியசனங்களுக்குப்பார்வையிற்றோன்றலாலே
யிரவியிதுவன்னதானவிவைக்கண்டறியாமூட
ரிரவியேவிழுங்கப்பட்டானென்பர்தம்மயக்கத்தாலே. (௬௨௩)

அதுபோற்றேகமாதியினமாம்பந்தம்விட்ட
நிலாப்பிரமவித்தைத்தேகிபோற்றோன்றலாலே
பேதமையுற்றமூடரினனவன்றேகியென்றே
போதுவாருலகுளோன்றுமுண்மையாயவனுக்கில்லை. (௬௨௪)

பன்னியமுத்தன்றேகம்பாம்புடைச்சட்டையேபோற்
றுன்னியபிராணவாயுத்தொடர்விறலிங்குமங்குந்
*துன்னியவெவ்வாறெனுஞ்சலித்திடமற்றவற்கு
னுன்னியமுத்தனுக்கிங்கொன்றுமேயானியில்லை. (௬௨௪)

ஒருநதிப்பிரவாகத்தாலொன்றியதாருவாதி
தரணியின்மேடுபள்ளந்தன்னிலேசாருமாபோன்
மருவியபிராரத்தத்தால்மாசிலாமுத்தன்றேகம்
பொருளிலாப்போகந்தன்னிற்பொருந்துமொவ்வொருகாலத்தே. ( )

பேதமாம்பிராரத்தத்தாற்பிறந்தவாதனைகளாலே
போதமில்பெத்தன்றேகப்போலவேமுத்தன்றேக
மேதமேபோகத்தின்கணிசைவுறுமிக்கமுத்த
னேறியதடத்துனேபோலுமேசையாய்வெறிதிருப்பன். (௬௨௬)

சத்தநாதேவன்முத்தன்சக்கரமுலைமேபோற்
கத்துருகரணமாதிகற்பனையாதுமற்றுச்
§சத்தியவித்தியத்தைச்சூழ்புலன்றன்னிற்சேரா
னத்தினின்றுந்திருப்பானவனுதாசீனனவன். (௬௨௭)

சத்துமாஞ்சொருபானந்தச்சுவைதனைப்பானஞ்செய்து
மத்தமாஞ்சித்தனுமாகிலாச்சீவன்முத்தன்
‡சத்தியவித்தியாதித்தொழிலிறுத்தெருடும்பேதை
யித்துணையேனுமெய்த்தானேகமோங்கலங்காதிருப்பன். (௬௨௮)

---

* துன்னியவென்றது துன்னிய வென்று எதுகைநோக்கி மருவிற்று.
§ சத்தியவென்றது சத்தியவென்று எதுகைநோக்கி மருவிற்று.
‡ சத்தியவென்றது சத்தியவென்று எதுகைநோக்கி மருவிற்று.

யாதொருபிரமஞானியிலக்கியாலக்கியங்க
ளோருமேவிட்டகற்றியேகேவலனாய்நிற்பன்
சாருவாமவனே *நித்தசச்சிதானந்தமாக
வோதியசிவசொரூபனுண்மையீதுண்மையீதே. (௬௨௯)

கிரியையெல்லாமுடிந்தகேவலப்பிரமஞானி
சரீரமோடிருக்கும்போதேதான்சதாமுத்தனானோன்
பரவியவுபாதியெல்லாம்பற்றறநசிக்கும்போது
நிருமலநிருவிகற்பநிர்க்குணப்பிரமமாவன். (௬௩௦)

ஒருநடனொருவேடத்தையொன்றினுமொன்றுப்போதும்
புருடனேயாகுமாபோற்பூரணப்பிரமவித்து
மொருமையினுபாதிதன்னையொன்றினுமொன்றுப்போதும்
பிரமமேயாவனன்றிப்பிறிதெதுமாகமாட்டான். (௬௩௧)

தருவிடைப்பழுத்தபன்னந்தவிர்ந்துதானெவ்விடத்துந்
தரணியில்வீழ்வதேபோற்றத்துவமாகின்ற
விருமையில்ஞானிதேகமெங்கணும்வீழ்ந்தாலெ
னருமையாஞானத்தீயாலஃதுமுன்வெந்ததன்றே. (௬௩௨)

சச்சிதானந்தபூன்றசாந்தமாம்பிரமத்தின்க
ணுச்சவத்துவிதானந்தவுருவமாயோய்ந்தஞானி
மச்சைதோல்மாமிசாதிமலமூறுமுடல்விடுக்க
வச்சமிறேசங்காலமாதியைப்பேணவேண்டாம். (௬௩௩)

ஏதெனிந்தத்தேகமிறந்திடல்மோக்ஷமன்றே
யோதியகடதண்டாதியொழித்தலுமோக்ஷமன்றே
யேதமாம்வித்தையாலேயெய்தியமனமுடிச்சு
யாதுமேயொழிவதன்றோவெதிகளுக்கிசைந்தமோக்ஷம். (௬௩௪)

*சாக்ஷாச்சச்சிதானந்த என்றும் பாடம்.

ஆதலாலெவணில்ஞானியாக்கைதான்வீழ்ந்ததாலெ
னோறியதருவின்பன்னமொருநதிவாய்க்கால்வீதி
மேதகுசிவாலயாதிமீதுதான்வீழ்ந்ததாலே
யேதுமேசுபாசுபந்தானிசைவதுதருவுக்குண்டோ. (௬௫௫)

மரமுடையிலைபலங்கண்மலருகணசிப்பதேபோற்
சரீரவிந்திரியமாதிசகலமுநசிக்குமன்றி
யொருசதானந்தசித்தாயோங்கியவான்மாவுக்கு
மருவுமோர்நாசமில்லைமரமெனவிருக்குமான்மா. (௬௫௬)

சுருதியுஞ்சிற்கனான்மசொரூபமேசத்தாமென்று
மருவியவுபாதியெல்லாமாறியேநசிக்குமென்றும்
பிரகதாரணமென்கின்றபெருகியவுபநிடத்திற்
சருவதாவான்மாவுக்கேசத்தியத்தன்மைசாற்றும். (௬௫௭)

திரணெருப்பாய்படங்கள்திறமுறுங்கற்கடங்கள்
மரமுதலெரிக்கப்பட்டோர்மண்வடிவாவதேபோற்
றிரிசியத்தேகமாதித்திரளெலாஞானத்தீயா
லெரியுறப்பட்டபின்னரேகசிற்சொரூபமேயாம். (௬௫௮)

இரவியின்றேசிடத்திலிருளிறக்கின்றதேபோற்
றிரிசியமியாவுமான்மத்திகழ்விலேலீனமாகும்
வருகடமுதலுடைந்தால்வான்மஹாவானமேபோற்
பிரிவுறுமுபாதிபோனாற்பிரமமாம்பிரமவித்தே. (௬௫௯)

நீரினீர்தைலந்தன்னிற்றைலஞ்சேர்ந்து
பாரினிலையிக்கியத்தைப்பற்றியபான்மையேபோற்
பூரணப்பிரமத்தின்கண்பூரணப்பிரமஞானி
சாரலுற்றேகமாகச்சந்ததமிலங்காநிற்பன். (௬௬௦)

பொருவிலாவகண்டானந்தபோதமாம்பிரமமாக
மருவியேயிருப்பதானமாசிலாவிதேகமுத்திப்
பொருளினையடைந்தஞானிபூருவம்போலமற்றுந்
திரிசியச்சகத்திலென்றுந்தியங்கியேசனியான்மைந்தா. (௫௬௧)

அருமையாம்பரசிவைக்கியமறிந்தநல்ஞானத்தியா
லொருமையிலவித்தையாதியுடலெரிபட்டபின்னர்
பெருமையுள்சந்நியாசிபிரமமாய்நிற்பதாலே
பிரமமாமவனுக்கெங்கும்பிறப்பதுமுண்டோசொல்லாய். (௫௬௨)

மித்தையாய்த்தோன்றுஞ்சர்ப்பமேவியவகுதிறுசஞ்
சுத்தமாய்யிரச்சுவின்கண்சோதிக்கிலாததேபோல்
மித்தையாம்மாயையாலேமேவியபந்தமோக்ஷஞ்
சுத்தமாமான்மாவின்கண்சோதிக்கிலென்றுமில்லை. (௫௬௩)

இருளுமாவரணசத்தியிருக்குமேற்பந்தமென்று
மருளுமாவரணசத்திமரிக்குமேல்மோக்ஷமென்று
முரைசெயவொண்ணுததாகுமுண்மையிற்பிரமமன்றி
இருளுமாவரணசத்தியெவளவுமிலாததாலே. (௫௬௪)

சருவதாவிலங்காநின்றசத்தியப்பிரமமன்றி
இருளுமாவரணமாதியேதுமேயிருக்குமாகிற்
பரமவத்துவிதத்தன்மைபாலனேயானியாகும்
மருவுமவ்வாணிதன்னைமாமறைசகிக்கமாட்டா. (௫௬௫)

விரிவுறுமுகிலால்வந்தவிழியிறுவரணந்தன்னை
யிரவியிலேற்றுமாபோல்னைராகின்றமூடர்
பரவியமனத்தால்வந்தபந்தமோக்ஷங்கடம்மை
பொருவிலாப்பிரமத்தின்கண்பொய்யதாய்கற்பிப்பாரால். (௫௬௬)

அகிலவத்துவிதாசங்கவறிவுருவக்கரத்தி
லிகுதிலையிருதுண்டென்னுமிவ்விதத்தோற்றமெல்லாம்
பகர்மனோதர்மமன்றிப்பரத்தினுக்கிலாததாலே
புகலுமிப்பந்தமோக்ஷம்பொய்மாயைதந்ததேயாம். (௩௪௭)

பரமமாமான்மாவுக்குப்பந்தமோக்ஷங்களில்லை
நிருமலநிருவிகாரநிஷ்களசாந்தமாகி
யொருமையாய்வானமேபோலோங்கியோர்பழுதுமற்ற
பரமமாந்தத்துவத்திற்பரவுகற்பனையேயில்லை. (௩௪௮)

ஓதுமுற்பத்தியில்லையொருவிநாசமில்லைத்
தீதுறுபெத்தனில்லைத்திகழ்முமூக்ஷுவுமேயில்லைச்
சாதகமில்லைமோக்ஷஞ்சார்ந்தவனில்லையெல்லாம்
போதமாம்பிரமமேயாம்புகல்பரமார்த்தமீதே. (௩௪௯)

சகலவேதாந்தநூலிற்சார்ந்தசித்தாந்தமான
ரகசியமீதேமெத்தரகசியமீதேயாகும்
புகழுமிப்பரமமானபொருளினையுன்றனக்கு
மகனேயுன்பக்தியாலேமகிழ்ந்துநாமுபதேசித்தேம். (௩௫௦)

சகலவாசையுமேயற்றுச்சாரமாம்புத்திபெற்றுப்
புகல்கலிதோஷமொன்றும்பொருந்திடாமுமூக்ஷுத்தன்னைச்
சகமிதினீசோதித்துச்சாற்றுமிப்பொருளையெல்லாம்
மகனேயவ்வதிகாரிக்கேமயலறவுபதேசிப்பாய். (௩௫௧)

இந்தவாதேசிகேந்திரனிசைத்தவிவ்வுபதேசத்தைச்
சிந்தையுண்மகிட்சியோடேசிரவணஞ்செய்துசீடன்
வந்தனமனந்தஞ்செய்துமற்றவனனுஞ்ஞைபெற்றுப்
பந்தமற்றவனேயாகிப்பாரினிற்சஞ்சரித்தான். (௩௫௨)

அந்தவாசாரியேயந்திரனைக்கண்டவானந்தமாகுந்
சிந்துவிலென்றுமூழ்குஞ்சித்தனாய்ச்சிரேஷ்டனெனிப்
பந்தமாரிவர்தம்மைப்பாவனமாக்கவென்றுந்
தொந்தமார்பூமியெல்லாந்தனைச்சஞ்சரித்தான். (௮௫௩)

இந்தவாகுரவனுக்குமிசைத்தவோர்சீடனுக்கும்
வந்தசம்வாதமாகவாமுமுக்ஷுக்களுக்குச்
சிந்தையிலான்மருபந்தசெவ்விதாயுணருமன்ன
மிந்தநூன்மார்க்கமாகவிங்ஙனநிருபித்தேமியாம். (௮௫௪)

வித்தகன்மத்திறலேவின்மலசித்தராகி
மித்தியாபவசகத்தில்விரக்தராய்ச்சாந்தராகிச்
சத்தியச்சுருதிகம்பிச்சன்முமுக்ஷுக்களான
வுத்தமவைதிகளிந்தவுபதேசமாதரிப்பார். (௮௫௫)

மோகமார்பவமார்க்கத்தின்முத்தாபபானுதேசா
லாகினதாத்துன்பமடைந்துநிர்விருப்பத்தோடே
வேகமாய்வருந்தியோடிவெறிதானமருதேசத்திற்
சோகமேயுற்றவர்சுகத்திணையடையவேண்டி. (௮௫௬)

மெத்தவுங்கிட்டிநின்றமெய்யுணர்வனந்தானந்த
வத்வயப்பிரமமாகுமமிர்தவாரிதியைக்காட்ட
வுத்தமச்சங்கராசானுரைத்திடுமிந்நூன்றான்
நித்தமுமுத்தியின்பநிலைமையாய்நிகழாநிற்கும். (௮௫௭)

இப்படிச்சங்கராசானிசைத்தவிக்கிரந்தநூலே
யொப்பிலாதடனராசதேறுங்கியகருணையாலே
தப்புறுமென்றன்வாக்காற்றமிழ்மொழிக்கவிதையாகச்
செப்பினேனியமேலோரிதைச்செவ்விதென்றெடுப்பரேனும். (௮௫௮)

இந்தவாரமைக்கப்பட்டவிக்கவிமாலைதன்னைச்
சந்ததஞ்சிவகாமாம்பாசகிதனாய்வீற்றிருக்குஞ்
சுந்தரநடனராசன்சுத்தமாம்பாதப்போதி
லந்தமில்மகிழ்ச்சியோடேயர்ப்பணஞ்செய்யலானேன். (௬௫௯)

திருவிடைமருதூரின்கண்டிரமதாய்வசிக்காநின்ற
பிரமவுபநிஷத்துதித்தபெருமைசேருலகநாதன்
மருளறும்விவேகசூடாமணியெனுங்கிரந்தநூலை
வரதமிழ்க்கவிதையாகவளமதாயமைக்கலானேன். (௬௬௦)

மகிழ்தருவிவேகசூடாமணியெனுமிந்தநூலை
யகமுறவாசான்முன்பாயமலமாய்ப்படித்தறிந்தோன்
சுககனவடிவாய்நித்தசுத்தமாம்பரமான்மாவே
யகமெனவறிந்துநன்றாயகண்டமாயிலங்காநிற்பன். (௬௬௧)

அகிலநாயகனேபோற்றியம்பிகாபதியேபோற்றி
திகழ்சபாதிபனேபோற்றிதிருத்தநாயகனேபோற்றி
சுககனவடிவேபோற்றிசுத்தமாமுருவேபோற்றி
யகமெனுந்திகழ்வேபோற்றியகண்டமேபோற்றிபோற்றி. (௬௬௨)

(ஆகப்பாயிரமுள்படத்திருவிருத்தம் - ௬௭௧.)

விவேகசூடாமணிமூலம்-முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீசங்கராசாரியசுவாமிகள்திருவடிவாழ்க.

கருணாநிதிதுணை.

சர்வஞ்சின்மயம்.

குருபரம்பரை வணக்கம்.



பரமாகவொளிர்சச்சி தானந்தமாம்விண்டு
பங்கயன்வசிட்டர்சத்தி
பராசரமாமுனிமகா வியாசர்சீர்சுகர்கௌட
பாதர்கோவிந்தயோகி
யருளுருவமாஞ்சங்க ராசாரியாமிறைக
ளமர்பத்மபாதருயரத்
தாமலகர்தோடகா சிரியர்வார்த்திகர்வித்
தியாரண்யராகுமரவோ
ரிருளுருவமற்றவர் மரபதனில்வந்தசுப்
பிரமணியதேவனையின
வீசனைமுகப்பவா ரியன்வீரபத்திரகுரு
வின்பமுத்தை [illegible]
டெருளுருவமா[illegible]தயனனன்மைகளிலாத்
தியமேனன்றனையுமண்ட
சீர்முத்[illegible]ருணைச்சிதம்பர
தேசிய[illegible]ழகந்[illegible]ளிறைஞ்சுவோமே.

[illegible]துதி.

பாசமனைத்[illegible]துளிப் பரித்திடாக்கி
தேசானி[illegible]யனைக்காட்டிப்
பேசுமோ[illegible]புணக்கிலை யெனப்பேசித்
தாசுக்[illegible]காசனைத் தொழுவாம்.

விவேகசூடாமணி பரிசோதனபத்திரம்.

பக்கம்.	பாடல்.	வரி.	பிழை.	திருத்தம்.
௯	௮	௨	துவ்வாரத்	துவ்வறத்
௰	௫௪	௨	பாரிகிற்	பாரினிற்
௨௪	௱௫௰	௨	ெதுலலா	ெதுல்லா
௩௬	௱௯௨	௬	வைந்த	வைத்த
௩௫	௱௯௫	௬	துகிக்கும	தகிக்கும்
௩௯	௨௨௰	௩	பாவை	பாவம்
௪௨	௨௩௫	௨	னிகன்று	கின்று
௪௩	௨௪௩	௧	விரிவுரு	விரிவுறு
,,	௨௪௫	௧	ன்னை	வன்னை
௪௯	௨௫௯	௩	பிரமை	பிரமே
௫௪	௯௰௨	௧	விடுத	விடுத்த
௫௭	௩௩௫	௨	பிரமதி	பிரமத்தி
௬௦	௬௱௨	௬	தவிர்க்து	தவிர்க்கு
,,	௬௱௬	௩	கித்துரு	கித்துரும்
௭௫	௪௩௬	௩	பறதி	பற்றி
௮௪	௬௯௪	௧	பகடின்னை	பக்கடின்னை
௯௬	இலக்கம்	௧௰	௯௬௫	௫௬௯
௯௯	௫௭௯	௧	பாரிருக்	பாரிருக்

சங்கமில்லாமலென்றுஞ்சாந்தமாந்தத்துவத்தைப்
பங்கமில்லாதுதானாய்ப்பார்த்துநன்றாயறிந்த
துங்கமாஞ்சந்நியாசிதூரவாகாமியத்தை
யெங்குமேயெவளவேனுமென்றுமேயிசையான்விண்போல். (ருக0)
ஒருமையாம்விண்கடாதியுபாதியின்புணர்வினாலே
மருவியமதுகந்தாதிமருவிடாத்தன்மையேபோ
லொருமையாமான்மஞானியுபாதியின்புணர்வினாலே
மருவியகன்மத்தோடேமைந்தனேமருவமாட்டான். (ருகக)
போதமுண்டாவதற்குப்பூருவமேயுதித்த
பேதமாம்பிராரத்தந்தான்பெறுபயனளியாவண்ண
மோதியஞானத்தாலேயொழிந்திடாதிலக்கியத்தின்
சேதமேயுத்தேசித்துச்செலுத்தியபாணமேபோல். (ருகஉ)
புலியெனும்புத்தியாலேபோட்டவோர்பாணமற்று
மூலவியபசுவிதென்றேயுண்மையையுணர்ந்தபோது
மலைவுறமத்தியத்திலடங்கிநிற்காமலேதன்
பெலமுடனிலக்கியத்தைப்பேதித்துநிற்குமன்றே. (ருகங)
ஆகையாலறிஞருக்குமதிபெலபிராரத்தந்தான்
போகமே *புசித்ததாலேபோக்கிடவேண்டுமித்தை
யேகமாஞானமாகுமிலங்கியவன்னிதன்னா
லாகினசஞ்சிதத்தோடழியுமாகாமியந்தான். (ருகச)
பிரமசீவைக்கியத்தைப்பிரிவறவறிந்துபின்னு
மருவியம்மயமேயாகமாறாமலென்றுநின்றோர்
திரிவிதக்கன்மமுந்தாஞ்சேர்ந்திடாரவரேகித்த
நிருமலநிருவிகாரநிர்க்குணப்பிரமமன்றே. (ருகரு)

*புசித்தவற்றாலென்றும்பாடம்.

யாதொருவுபாதிசங்கமிலதுகேவலமாய்நின்ற
பேதமில்பிரமரூபம்பெற்றுளவறிஞருக்கிங்
கோதியபிராரத்தத்தையுண்டெனவுரைக்கவொண்ணா
காதல்செய்நனவுற்றோற்குக்கனவுளதென்னலாமோ. (௫௧௬)

கனவுளோன்சொப்பனத்தினண்ணியபொய்த்தேகத்து
மனையதேகோபயோகமாகினபொய்ஞாலத்து
நனவிலியானெனதிதென்றுநாடிடான்பின்றோவென்று
லனகனேநனவிற்றோனேயன்னவனமைந்துநிற்பன். (௫௧௭)

அன்னவன்மித்தையானவச்சகமடையப்பேணான்
பன்னுமச்சகமுஞ்சேரப்பட்டதாய்க்காணான்மற்றுந்
துன்னியவச்சகத்தின்றொடர்விருந்திடுமேயாகி
லன்னவன்துயிலைவிட்டோனன்றெனவறியலாமே. (௫௧௮)

இந்தவாபிரமந்தன்னையெய்தியபிரமஞானி
யந்தநற்பிரமமாகவடங்குவன்பிறிதைப்பாரான்
சமந்தனேயவன்புசித்தல்மலசலம்விடுத்தலாதி
சிந்தைசெய்வதுகனவிற்சேர்பொருட்சிந்தைபோலாம். (௫௧௯)

கருமமேமூலமாகக்கற்பிதத்தேகத்துக்கிங்
கொருமையில்பிராரத்தத்தையொப்பலாமற்றனாதி
சொருபமாய்க்கருமத்தாலேதோன்றிடாவான்மாவுக்கிங்
கொருவிதக்கன்மமேனுமுண்டெனவொப்பலாமோ. (௫௨௦)

ஓதியவான்மாவென்றுமுதித்திடாநித்தமென்றே
யேதமிலாமலுள்ளவியல்பினையிசைக்காநின்ற
வேதமோதுவதாலந்தவிமலமாஞ்சொரூபமானோற்
கேதுமேபிராரத்தந்தானிருக்குமென்றொப்பலாமோ. (௫௨௧)

என்றுதேகான்மபுத்தியிசைந்ததாயிடுமோவன்றே
துன்றுபிராரத்தகன்மத்தொடர்வுமேசித்தியாகு
மொன்றுதேகான்மபுந்தியொழிந்துளவறிஞரின்பா
னின்றதாய்ப்பிராரத்தத்தைநினைவதுநீதியோசொல். (ருஉஉ)

கற்பிததேகத்துக்குங்கருதியபிராரத்தத்தை
யொப்புதல்மயக்கமேயாமுண்மையிற்கற்பிதந்தா
னெப்படிச்சனிக்குநிற்குமிறந்திடுமியாதுமில்லை
யிப்படியுசாவிலாக்கையென்றுமேயசத்துத்தானே. (ருஉங)

ஆதலாலசத்தாக்கைக்குமமைபிராரத்தமில்லை
யோதியநீதியாகவொன்றினுக்கேனுமீது
சாதுவேயிலாததேனுஞ்சத்தியஞானிகட்கு
வேதமேபிராரத்தத்தைவிதிப்பதின்கருத்தைக்கேளாய். (ருஉச)

அந்தகல்வித்தையாலேயவித்தைகாரியநசித்தாற்
பிந்தியித்தேகமாதிபிறங்குவதெப்படித்தென்
றிந்தவாசங்கிக்கின்றவீனரைச்சமாதானிக்கச்
சுந்தரமானவேதஞ்சொல்லிடும்பிராரத்தத்தை. (ருஉரு)

இப்படிவெளிநோக்காகவேகதேசத்தில்வேதங்
கற்பிதப்பிராரத்தத்தைக்காட்டிடுஞானிகட்குஞ்
செப்பியதேகமாதிசிறிதுமேசத்தாமென்றிங்
கொப்பிடும்வண்ணமித்தையுரைத்திடவில்லைமைந்தா. (ருஉசு)

அகிலபூரணமேயாகியாதியந்தங்களின்றி
மிகவுமோர்பிரமாணத்தால்மேவவொண்ணாததாகிப்
பகர்செயலின்றினின்றபரமமாம்பிரமமொன்றே
திகழுமத்வயமாயித்திற்சிறிதுமேபேதமில்லை. (ருஉஎ)

சுத்தநிஷ்கிரியசற்சிற்சுககனசொரூபமாகி
நித்தவத்துவிதமானநிருமலப்பிரமமொன்றே
புத்திரவெல்லாமாகிப்பூரணமாயிலங்கு
மித்திலவேறானபேதமெவளவுமில்லையென்றும். (ருஉ௮)

தள்ளவுங்கூட்டவுந்தான்றகாததாய்த்தன்னிற்றானாய்
யுள்ளவாதன்னிலொன்றுமொன்றிடாப்பிரமமொன்றே
யுள்ளிலும்வெளியிலெங்குமொருமையாய்நிறைந்துநிற்கு
மென்னளவேனுமித்திலெய்தியபேதமில்லை. (ருஉ௯)

நிரஞ்சனநிருவிகற்பநிஷ்களநுண்மையாகி
விரிந்தநிர்க்குணமாயொன்றால்விளம்பிடப்படாததாகிப்
பொருந்தியவடிவமானபூரணப்பிரமமொன்றே
இருந்தத்துவயமாயித்திலெவளவும்பேதமில்லை. (ருங௦)

சித்தமும்வாக்கியாவுஞ்சென்றுகோசரிக்கவொண்ணாச்
சுத்ததாய்ச்சுத்தசித்தாய்ச்சாருமோருவமையின்றி
நித்தவானந்தமாகிநிகழ்சொதசித்தமான
வத்வயப்பிரமத்தின்கணணுவுமேபேதமில்லை. (ருங௧)

போகமேதள்ளியந்தப்போகவாசையும்விடுத்தின்
காகினசாந்திதாந்தியடைந்தமாவெதிகடாமே
யேகநற்றத்துவத்தையிருதயந்தனிலறிந்து
பாகமாமியோகத்தாலேபரசுகமடைந்தாரன்றோ. (ருங௨)

ஆதலாற்பாலநீயுமகண்டவானந்தமான
பேதமினின்சொரூபப்பிரமதத்துவமறிந்தே
யேதமாநின்மனத்தாலிங்குகற்பித்தமோகப்
பேதமாம்பந்தநீக்கிப்பேறுபெற்றவனாய்நிற்பாய். (ருஙங)